மகிழ்ச்சி

CONNEMARA PUBLIC LIBRARY
1955
MADRAS

16-11-1952 - நந்தன - கார்த்திகை
அணா 4

பிரபல திருமணம்.

விருதுநகர், எவரெஸ்ட் சுருட்டு பாக்டரி அதிபர் திரு. K. S. S. அய்யாசாமி அவர்கள் (இடதுபுறம் நிற்பவர்) மகள் செல்வி: தெய்வானைக்கும், திரு. அ. பொ. பூ. சுருளி நாடார் அவர்கள் தம்பி செல்வன்: நவமணிக்கும், 29–10–'52 புதன்கிழமை, விருதுநகரில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் திரு. **C. N. அண்ணாதுரை M. A.,** அவர்கள் முன்னிலையில், "தமிழ்த்தென்றல்" ஆசிரியர் திரு. **V. V. இராமசாமி M. L. A.,** அவர்கள் தலைமையில் சிறப்பாக சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. கழகப் பிரமுகர்கள் பலர் நேரில் கலந்து கொண்டார்கள். அநேகரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன.

மணமக்கள் நீடு வாழ்க!

குறைந்த விலையில் சிறந்த புத்தகங்கள்.

தலைவர் காமராஜ் (திரு. R. K. சண்முகம் முன்னுரை)	1—8—0
சபலம் "ஜீவா"	0—12—0
விதியா? "நா. சதானந்தம்" (இரண்டாம் பதிப்பு)	0—8—0
மனப்புயல் ,,	0—8—0
15 நிமிடங்கள் ,,	0—4—0
காமமும் காதலும் "ஆ. கந்தசாமி B. A."	0—8—0

V. P. P. கிடையாது. விற்பனையாளர் கழிவு 25%

தனிப்புத்தகம் வேண்டுவோர் விலையுடன் 0—0—9 அணா தபால் செலவு சேர்த்து அனுப்ப வேண்டும்.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்

விருதுநகர்.

தி. ஆ. 1983—கார்த்திகை 1.

ஆண்டு 4] 16-11-52 [மாதம் 6

பொருளடக்கம்

பயங்கர புள்ளிவிபரம் 3

இரவு —பரிசுக் கட்டுரை 6

முள்—தொடர்கதை
—ஏ. வி. பி. ஆசைத்தம்பி 9

சந்தேகம் ஒழிக—ஜாலி 14

அறிவுப் பூங்கா 16

காதற்கடல்—தொடர்கதை
விருதை மகிழ்நன் 17

பிரயாண அனுபவங்கள்
—டி. ஏ. மதுரம் 25

தெறித்த முத்துக்கள் 31

ரவியும் ராணியும்
—ஆ. கந்தசாமி பீ. ஏ. 33

இதுநிஜமா?—வாகன் 39

இரு கடிதங்கள்
—எம். எஸ். நாச்சியப்பன் 41

பொங்காதா மகிழ்ச்சி
—தமிழ்ப்பாலன் 45

நானே ராஜா—மகிழ்ச்சி 46

உங்களுக்குத் தெரியுமா? 48

பராசக்தி—விமர்சனம்
—டிடெக்டிவ் 49

ஞா. சோ. போட்டி 8 51

எப்படிப்பட்டகல்விவேண்டும்? 53

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

திறமையுள்ள (தி. மு)
திராவிடத் தோழர்களே!

அரசியல் அனுபவம் உள்ள
முற்போக்கு வாலிபர்களே!

மற்றும் பல கட்சித் தோழர்களே!

படித்துவிட்டீர்களா?

புதுமையான கருத்துப் பின்னல்!
வாழ்க்கையின் பிரதிபலிப்பு!
சலிப்புத்தட்டாத சம்பவங்களின்
மோதுதல்!

இளம்சிற்பி தீட்டிய

நான்?

கதைப் புத்தகம்

விலை ரூ. 1. கழிவு 25%

★

தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் விற்பனையாளர்கள் தேவை. முன் பணம் அனுப்புங்கள். விபரங்களுக்கு ரிப்ளே கார்டு எழுதுக. ஒவ்வொருவரும் படித்துத் தீர்ப்புக்கூறும் புத்தகம்.

★

முகவரி:-

பாசுமணி பதிப்பகம்,
பொள்ளாச்சி.
S. I. Ry.

விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்
15—11—52 முதல்
பராசக்தி
4வது
வாரம்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது.

மகிழ்ச்சி கார்டு போட்டி 2. பரிசு ரூபாய் 1.

காதலா? கடமையா?

கார்டின் ஒரே பக்கத்தில் சுருக்கமாக உங்கள் கருத்தைத் தெளிவாக 30—11—52க்குள் எழுதியனுப்புங்கள். பிரசுரத்திற்குத் தகுந்ததில் சிறந்த ஒன்றிற்குப் பரிசு ரூபாய் ஒன்று. [ஆ-ர்]

விருதுநகர் நியூ முத்துவில்
மணமகள்
இப்பொழுது நடைபெறுகிறது.

விரைவில் வருகிறது!
என்னெஸ்கேயின் " **பணம்** "

பயங்கரமான புள்ளி விபரம்

இந்திய சமூகசேவை மகாநாட்டினர் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு துண்டுப்பிரசுரத்தில், இந்நாட்டின் சுகாதார நிலைமைபற்றியும், மக்கள் உற்பத்தியின் பயங்கர வேகம்பற்றியும் புள்ளி விபரங்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்தியாவில் உள்ள குருடர்கள் சுமார் 20 லட்சம். குஷ்டரோகிகள் $2\frac{1}{2}$ லட்சம். பலவகைப்பட்ட வியாதி காரணமாக வருஷந்தோறும் இறப்பவர்கள் சுமார் ஒரு கோடி. அங்க முடமாகின்றவர்கள் பல்லாயிரக்கணக்கினர்.

ஆண்டுதோறும் பிறக்கும் குழந்தைகள் சுமார் 1,20,50,000 இவர்களில் கால்வாசிப்பேர் ஒரு வயதை அடைவதற்குள் காலமாகிவிடுகிறார்கள். மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கினரே 30 வயதுவரை வாழ்கின்றனர். பிரசவ காலங்களில் 1000க்கு 25 பெண்கள் இறந்துவிடுகின்றனர். ஆனால் அமெரிக்காவில் 1000க்கு ஒரு பெண்தான் இறக்கிறாள்.

இந்தியரின் சராசரி ஆயுட்காலம் 27 வருஷம். அமெரிக்கரின் வயதோ 60.

இவ்வளவிற்கும் காரணம் போதிய போஷாக்கு உணவு இல்லாததால் வியாதிகளை எதிர்க்கும் சக்தி நம்நாட்டு மக்களுக்கு இல்லை.

இதுதான் அந்தப் பயங்கர புள்ளி விபரம். இதே நேரம் இங்கிலாந்தைக் கவனிப்போம்.

ஒரே ஒரு குழந்தையைமட்டுமுள்ள பெற்றோர்களைக்கொண்ட குடும்பங்கள் பெருவாரியாக இருக்கிறதாம். சராசரி இரண்டு குடும்பங்களில் ஒன்றில் 16 வயதுக்கும் குறைந்த குழந்தைகளே கிடையாதாம். மணமான 5 பெண்களில் ஒருவருக்கு பூர்ணமாக குழந்தையே கிடையாது.

பிரிட்டனில் சுமார் 30லக்ஷம் தம்பதிகளுக்குக் குழந்தைகள் கிடையாது. 31,00,000 தம்பதிகளுக்கு ஒரே குழந்தை மட்டும்தான் இருக்கிறதாம். 80 லக்ஷம் வீடுகளில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளே கிடையாது.

மேற்கண்ட பிரிட்டனின்பிறப்புப் புள்ளி விபரங்களுடன், நம் இந்தியாவின் ஜனன விபரப்பட்டியையும் ஒப்பிடும்போது, இந்நாட்டின் ஏழ்மைநிலை என்றுமே மாறாது என்று துணிவுடன் கூறலாம் அறிஞர் டாக்டர் சந்திரசேகரன் அவர்கள் கூறியபடி இந்நாட்டின் குழந்தை உற்பத்தியைக் குறைத்தால் அன்றி, எவ்வளவுதான் உணவு உற்பத்தி

யைப் பெருக்கத் திட்டங்கள் தீட்டினாலும், சட்டங்கள் வகுத்தாலும், ஒருநாளும்சரிக்கட்டமுடியாததான்

ஐந்தாண்டுத் திட்டத்தில் குழந்தைகள் உற்பத்தியைக் குறைக்க இலவச கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகள் ஊர் ஊருக்கு ஏற்படுத்தி, கட்டாயப்படுத்தி, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்றும், மீறுபவர்களுக்கு தண்டனை அல்லது பெருந்தொகையாக வரி விதித்தாலன்றி ஐந்தாண்டுத் திட்டத்தால் ஒரு பயனும் கிட்டாது.

காந்தி வழியில் பிரமச்சரியத்தை மேற்கொண்டு, கர்ப்பத்தடைஎன்று வேதாந்தம் பேசித் திரிந்தால் இந் நாடு இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும் முன்னேற முடியாது என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

எனவே, உணவு, உடை முதலிய பற்றாக்குறைகள் நீங்கி மக்கள் தக்க போஷாக்கான ஆகாரம் உண்டு திடகாத்திரமாக, மற்ற நாடுகளைப் போல் வாழவேண்டுமானால், உடனே இலவச கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகள் முக்கிய நகரங்கள் பூராவிலும் திறக்கப்பட வேண்டும். இது பற்றிய ஆழ்ந்த கருத்துக்களை பின்பு ஒருசமயம் கவனிப்போம்.

கல்விக் கோயில் எழுப்பிய கனவான் மறைவு!

விருதுநகர் நகரசபைக்கு முதன் முதலாக எலெக்ஷன் மூலம் சேர்மன் பதவியைப் பெற்றவரும், பிரபல வர்த்தகருமான உயர்திருவாளர்: எம். எஸ் பி. செந்திக்குமார் அவர்கள், தனது 72வது வயதில், 23—10—52 வியாழக்கிழமை மாலை 5-15 மணிக்கு இயற்கை எய்தினார்.

"அன்னச் சத்திரம் ஆயிரம் கட்டல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னர் உள்ள தர்மங்கள் யாவும் பெயர்விளங்கி யொளிர, அன்னை யாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்" என்ற அமரகவியின் ஆழ்ந்த கருத்தின்படி, நகரில் இரண்டு முனிசிபல் எலிமெண்டரி பாடசாலைகளும், மல்லாங்கிணற்றில் ஒரு மத்திய பாடசாலையும் திரு. எம். எஸ். பி. எஸ்.ஸின் பொருளுதவியால் எழுப்பப்பட்டு அவர் பெயர் தாங்கி நடைபெற்று வருகின்றன. அது மட்டுமல்ல, அவரது 2 லட்ச ரூபாய் நன்கொடையின் அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்ட கல்விக் கோயிலாம் 'செந்திக்குமார் கல்லூரி' கம்பீரமாக நகரின் பெருமைதாங்கி வளர்ந்துவருகிறது.

திரு. எம். எஸ். பி. எஸ்.ஸின் இறுதி யாத்திரை

போட்டோ: விக்டர்டேவிட்

இதுவரை விருதையில் எந்தத் தனிப்பட்ட மனிதருக்கும் இவ்வளவு மரியாதை காட்டப்படவில்லை என்று கூறும்படி ஜாதி, மத, கட்சி பேதமின்றி சகலரும் தங்கள் அலுவலகங்களை மூடி, இறுதி ஊர்வலத்தில் (சுமார் அரைமைல் நீளத்திற்கு) கலந்து தங்கள் மரியாதையைத் தெரிவித்தார்கள். அன்னார் பிரிவால் வருந்தும், அவரது தலைமகனும், கடந்த நான்கு ஆண்டுகளாக நகரசபைத் தலைவராக இருந்தவரும், மீண்டும் 12—11—52உ சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. எம். எஸ் பி. எஸ். பெரியசாமி, அவரது தம்பி திரு. எம். எஸ். பி. எஸ். சங்கரலிங்கம் ஆகியோரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

விற்பனைக்கு!

புதிய "ரிமிங்டன்" டைப் ரைட்டிங் மிஷின் விற்பனைக்கு உள்ளது.

விபரங்களுக்கு:
டோர் நிர். 8,
செந்திவிநாயகபுரம்,
விருதுநகர்.

கதை எழுதுவோர்க்கு!

கதைகள் கைவசம் நிறைய இருப்பதால் மறு அறிவிப்புவரை யாரும் கதைகள் அனுப்பி வைக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். [ஆ-ர்]

அட்டைப்படம்: பத்மினி

1வது போட்டிப் பரிசுக் கட்டுரை

இரவு

[பா. வடமலைராசன், எஸ்.எஸ்.எல்.சி. மாணவன், மதுரை.]

காதலர்கள்

எங்களை இணைத்து இன்பம் தருவது இரவு. அந்த இரவை எழில் படுத்தும் முழுநிலவு அதோ! அதை அனுபவித்துக் கொண்டு அளவளாவுவதில் நாங்கள் அகமகிழ்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரும் அந்த நிலவைச் சுட்டிக்காட்டி மற்றவரைப்பற்றி உவமை கூறுவதில்தான் எங்களுக்கு எவ்வளவு உற்சாகம், உவப்பு! அந்த இரவின் அணைப்பில் சிக்கிய நாங்கள், அதற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றியோ, அடுத்துவரும் துன்பத்தைப்பற்றியோ நினைப்பதில்லை. அப்போது எங்கள் உள்ளம் உவகையால் நிறைந்திருக்கும்.

கடல்

உங்களுக்குமட்டுமா உவகை? எனக்கும்தான். இரவில் வானச் சோலையில் வண்ணமுற உலவுகின்ற நிலவின் ஒளிபட்டு எவ்வளவு உற்சாகமாகப் பொங்கி மகிழ்கின்றேன் தெரியுமா? அவன் என் காதலன்! இரவு வேளைகளில்தான். இரவு என்றதும் என் காதலன் வருவானென்று எனக்கு உண்டாகும் மகிழ்ச்சியை இவ்வளவுதான் என்று அளவிட்டுக் காட்டமுடியாது. மாதம் ஒருநாள்தான் அவனுடன் கலந்து என்னால் பூரண இன்பத்தைப் பெறமுடிகிறது. அதற்கு அடுத்த நாளிலிருந்து இன்பத்தைக் குறைத்துக் கொண்டே போவான். அதைப் பார்க்கப்பார்க்க எனக்கு வருத்தம் மேலிட்டுக்கொண்டே போகும். ஒருநாள் முழுதுமே வரமாட்டான். அன்று, நான் துன்பத்தின் சிகரத்தில் துடிதுடித்துப்போவேன். மேகங்கள் அவனை என்னிடம் வரவிடாமல் தடுக்கும் சில விநாடிகளைக்கூடப் பொறுத்திருக்க மாட்டேனே! அப்படியிருக்க ஒருநாள் முழுதும் வராவிட்டால் எப்படி என்னால் பொறுக்கமுடியும்? மறுநாள் முதற்கொண்டு மறுபடியும் இன்பம்தர ஆரம்பித்துவிடுவான். வராமலேயேஇருந்துவிடுகிறானே அந்தநாள்தான் அமாவாசையாம் அமாவாசை! சே...சே...எனக்குப் பிடிக்காது. வேறு எந்தக் காதலர்களுக்குமே பிடிக்காது.

திருடன்

உனக்குப் பிடிக்காது. மற்ற காதலர்களுக்கும் பிடிக்காது. ஆனல் எனக்குப் பிடிக்கும். அந்த அமாவாசை நாள்தான் எனக்கு ஆனந்தம் தரும் நாள். அது எனக்கே உரிய இன்ப இரவைக்கொண்ட நாள். இரவைப் பயன்படுத்திக்கொண்டு என் வாழ்க்கைத் திட்டத்தை வரையறுக்க வேண்டியவனுக இருக்கிறேன். போகத்தில் புரளும் பெரும்பணக்காரர்களுடன் நானும் என்னைப் போன்ருரும் பொதுவாக இரவு நேரத்தில்தான் போர் தொடுக்கின்ரும். சீமான்களின்செல்வத்தில் சிறிது பாகத்தைஎடுத்துக்கொண்டு ஏகிவிட ஏற்ற நேரம் இரவுதான். அதிலும் அமாவாசை எனக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஆனல் இரவு என்ருல் பணக்காரனுக்குநிம்மதி இருக்காது. எங்கே நான்வந்து விடப்போகிறேனே என்ற பயம் தான்!

பணக்காரன்

இரவு என்ருல் பயம்இருக்கத்தானே செய்யும். என் பணத்திற்காக எவ்வளவோ பாதுகாப்புகளிருந்தாலும் பயம் பயமாகத் தானிருக்கிறது. 'இரவுக்காலம் சீக்கிரம் போய்விடக்கூடாதா!' என்ற நினைப்புதான் எப்போதும் இருக்கிறது. அதற்காக இரவு முழுதும் விழித்திருக்க முடிகிறதா? நானும் தூங்குகிறேன்—பயந்தநிலையில். அந்த ஏழையும்தான் தூங்குகிருன். ஆனல் எவ்வளவு நிம்மதியாகத் தூங்குகிருன்?

ஏழை

நிம்மதியான தூக்கம் எப்படி இல்லாமலிருக்கும்? காலைமுதல் மாலைவரை கடும் வெயிலில் காய்ந்தவண்ணம் வேலை செய்த நான் இரவு வேளைகளில்தானே ஓய்வைப் பெறமுடியும்! பின் இரவில்நான் நிம்மதியைக் காண்பதில் என்ன வியப்பிருக்கிறது? மனைவியுடன் அளவளாவவும், மக்களைக் கொஞ்சிக் குலாவவும் இரவு வேளையன்றி மற்ற நேரம் எனக்கேது? பகலில் பட்ட பாடுகளைப்பற்றி அப்போதுநான் நினைப்பதில்லை. இரவில் அமைதியைக் காணுகின்றேன்.

இரவு

"அமைதியைத் தரக்கூடியது இரவு. அந்த நேரம்தான் தூக்கத்திற்குத் தகுதியானது. அந்த நேரத்தில் விழித்திருப்பதால் உடலுக்குக் கெடுதி ஏற்படும்" என்று டாக்டர்கள் எடுத்துக் கூறியும் சிலர் தங்கள் ஓய்வு நேரத்திற்கு என்னைப் பயன்படுத்திக்கொள்ளாமல் பலவித நோய்களுக்கு இடம் கொடுத்து விடுகிருர்கள். அவர்களைப்பார்க்க எனக்கு அவர்கள்பால் அனுதாபம் ஏற்படுகிறது.

எனது இயற்கைப் பண்பு இருள்தான். அதை விளக்க எத்தனையோ விதமான விளக்குகளை மக்கள் உபயோகிக்கின்றனர். இயற்கை, நிலவையும் விண்மீன்களையும் மக்களுக்கு உதவுவதற்காக உண்டாக்கியிருக்கிறது. பகலவனின் படையெடுப்பு முடிந்ததும் நான் என் ஆட்சியைத் துவக்கிவிடுவேன். மாடுகளைக்கொண்டு நீண்ட தூரம் பிரயாணம் செய்பவர்கள் பொதுவாக என்னைத்தான் பயன்படுத்திக்கொள்கின்றனர். காரணம் அவர்களுக்கு களைப்புத் தோன்றுவதில்லை. அவர்களது மாடுகளுக்கும் களைப்புஏற்படுவதில்லை. எவ்வளவு பாரம் இருந்தாலும் அதைப் பொருட்படுத்துவதில்லை உற்சாகமாகச் செல்ல நான் உகந்த நேரம்.

கட்டுரைப் போட்டி 2
பரிசு ரூபாய் 3

எது அழகு?

மேற்கண்ட தலைப்பில் மகிழ்ச்சி இரண்டு பக்கங்களுள் முடியக்கூடியதாக கட்டுரை ஒன்று எழுதி 25–11–52க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும் கவரின்மீது "கட்டுரைப் போட்டி 2, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்" என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

விருதுநகர்
சென்ட்ரல்
சினிமாவில்
14–11–52
முதல்
நடைபெறு
கிறது.

[கடந்தகதை: அடுத்தவீட்டு ஏழை ஜானகியை ராமன் காதலிக்கிறான்; சினிமா சென்று திரும்பியதும், ஜானகியிடம் காதல் கடிதம் கொடுக்க பையிலிருந்து எடுக்கிறான் ராமன். பின்.........?]

ஜானகி:

ஒரு வீரன் உரையில்இருந்து வாளை உருவினால் உபயோகிக்காமல் விடுவானா? கத்தியை எடுப்பதுபோலதான் பையில் இருந்து காதல்கடிதத்தைஎடுத்தார் ராமர். என் கையிலே கொடுத்துவிட்டு, "வருகிறேன்" என்று சொல்லி, புறப்பட்டுவிட்டார்.

நோயாளிகளை பார்த்துவிட்டு வருகிற டாக்டர்கள், போகும் போது மருந்துவாங்க ஒருசீட்டு கொடுப்பதில்லையா? கீழேவிழுந்த என் பாட்டியிடம் விடை பெற்று ராமர் வீட்டுக்கு போகும்போது டாக்டர் சீட்டு கொடுப்பதுபோல, காதல்கடிதம் கொடுத்தார்.

காதல்கடிதம்என்பது மருந்து வாங்கும் சீட்டு அல்ல, மனதை அறியும் கருவி என்று அவரும் நினைத்திருப்பார்; நீங்களும் அப்படிதான் எண்ணியிருப்பீர்கள்.

ஆனால்—காதல் வியாதியால் கஷ்டப்பட்ட எனக்கு, கடிதம் மருந்துவாங்கும் சீட்டாகத்தான் என்சிந்தனையில் பட்டது. எந்த டாக்டர்களும், வந்திருக்கிற நோயாளி ஏழையாச்சே, செலவைத் தாங்க அவனால் முடியாதே என்று நினைத்து சீட்டுக் கொடுக்காமல் இருப்பதுமில்லை.

ராமரும் டாக்டர்நிலையில்தான் இருந்தார்; நான்நிலை தெரியாமல் என்னை காதலித்து, எங்கள்

காதலை சமூகம் தாங்காது என்பதை தெரிந்தும், ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில், காதல் கடிதத்தைக் கொடுத்துவிட்டார், காசில்லாதவன் கையிலே டாக்டர்கள் கொடுக்கும் மருந்து சீட்டுப்போல.

கடன் வாங்கியாவது வியாதியைக் குணப்படுத்திக்கொள்ள ஏழைகள் எண்ணுவதுண்டு. நானும் கஷ்டப்பட்டாவதுகாதலை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தேன்; கடிதத்தை வாங்கினேன்.

ஆனால் இந்தக்கால காதலர்களுக்கு முன்யோசனை கொஞ்சங்கூட இல்லை என்றே நினைக்கிறேன். ராமர் என்னிடம் கடிதம் கொடுக்கும்போது, இரவு நேரமட்டுமல்ல, சுற்றிலும் ஒருவர்கூட கிடையாது; குரு பத்தினியை கெடுத்த சந்திரன்கூட மேகத்திற்குள்இருந்தான். இந்த நிலையிலே அவருடைய ஆசையை நேரிலேயே சொல்லியிருக்கலாமே?

"ஜானகி! நான் உன்னை காதலிக்கிறேன். என்னைநீ கட்டாயம் காதலிக்கவேண்டும். இருவரும் கல்யாணம் செய்து இன்பமாக வாழ்வோம்" இப்படி ஏதேதோ கவிதையழகில் கூறி, என் கையைப் பிடித்து, ஒரு 'இச்' கொடுத்திருக்கலாமல்லவா? இப்படி செய்திருந்தால் இன்பம் அவருக்குமட்டுமா? எனக்கிருக்காதா?

பாலகிருஷ்ணன் 'ஆ' என்று வாயைத் திறந்தஉடனே ஈரேழு பதினான்கு லோகமும் தெரிந்ததாம். இது பொய்யோ, மெய்யோ எனக்குத் தெரியாது. வேண்டுமானால் அந்தக்கால பாலகிருஷ்ணனுடையவாய் ரேடியோ டெலிவிஷனாகஇருந்திருக்கலாம்.

எப்படி இருந்தால் என்ன, ராமர் மட்டும் என்னை கட்டிப்பிடித்திருந்தால், இந்த உலகங்கூட என் நினைவில் இருந்து அகன்றிருக்கும். கடிதம்எழுதி காலங்கழிப்பதுதான் இந்தக்கால காதலர்களின் வேலையாக இருக்கிறது. பேப்பருக்கும் மையுக்கும்பிடித்த கேடு. நேரில் அனுபவிக்க வேண்டிய இன்பத்தை பேப்பரின் எழுதி ரசிக்கவேண்டியதிருக்கிறது.

கடிதத்தைக் கொடுத்துவிட்டு, ராமர் காரில் போய் ஏறினார். கார் புறப்படுவதற்குமுன்பு என்னை ஒருமுறைபார்த்து சிரித்தார். இந்தக்காலகாதலர்களுக்கு முன்யோசனை இல்லைஎன்று முன்பே சொன்னேனல்லவா? அதுஎன் காதலர் ராமருக்கு அடியோடு கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்.

காரில் போய் உட்கார்ந்து, என்னைப் பார்த்து சிரித்த ராமருக்கு முன் யோசனை இருந்திருந்தால், என்னை உடனே கூப்பிட்டு, "ஜானகி! கார் 'ஸ்டார்ட்' எடுக்கவில்லை, கொஞ்சம்தள்ளு',

என்று சும்மாவாவது சொல்லக் கூடாதா? இதெல்லாம் தெரியாமல் உடனே புறப்பட்டுவிட்டார்

கார் மறையும்வரை கையிலே விளக்கோடு பார்த்தபடி நின்று கொண்டிருந்தேன். அப்போது என்னை யாராவது பார்த்திருந்தால் "விளக்குச் சிலை" என்று தான் சொல்லியிருப்பார்கள். எனக்கும் ராமருக்கும் கல்யாணமாகிவிட்டால்......... அவர்கூட நானும் காரில் போவேன். எரியும் என் கையில் உள்ள விளக்கைப்போல ஏங்கி நின்றிருக்க மாட்டேன்.

ஜானகி என்ற சப்தம் கேட்டு உள்ளே சென்றேன். என் பாட்டி தண்ணீர் கேட்டாள். பாட்டி தூங்கியபின் கடிதத்தை படிக்கலாம் என்று நினைத்து, ஒரு பானைக்கிடையில் கடிதத்தை ஒழித்துவைத்துவிட்டு பாட்டிக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தேன். பாட்டியும் தூங்குவாள் தூங்குவாள் என்று பன்னிரண்டு மணிவரை படுத்தபடி விழித்திருந்தேன். பாட்டி இடையிடையே என்னோடு பேச்சுக் கொடுத்தாள், நான் தூங்குவது போல நடித்தேன். இன்னும் தூங்காமல் 'தொணத்தொண' என்கிறாளே என்று எனக்கு கோபம் கோபமாய் வந்தது. பிறகு என் பாட்டி எப்போது தூங்கினாளோ எனக்குத் தெரியாது. திடீரென்று கண்விழித்துப்பார்த்தேன், விடிந்திருந்தது.

தூக்கத்திற்குதான் எவ்வளவு கெட்டஎண்ணம். என் காதலர் கடிதத்தை நான் படிப்பதற்கு முன்பு, என் கண்களை மூட வைத்துவிட்டதே தூக்கம். என் பாட்டியும் தூக்கமும் சேர்ந்து என்னை சதிசெய்து உறங்கவைத்துவிட்டார்கள். பாட்டி எங்கேயாவது வெளியே போகமாட்டாளாஎன்று நினைத்தேன். "பகவானே! பாட்டிக்கு வெளியே ஏதாவது ஜோலி உண்டாக்கு" என்று வேண்டினேன்.

கடவுளை கல் என்கிறார்கள் கபோதிகள். கம்பியிலா தந்தியிலே பேசுவதுபோல, மானசீக பக்தியால் பகவானை வேண்டினேன். என்கூட நின்றுகொண்டிருந்த பாட்டி திடீரென்று... "ஜானகி! வீட்டைப் பார்த்துக் கொள், எதிர்த்த வீட்டுக்குப் போய்வருகிறேன்" என்று சொல்லிப்புறப்பட்டாள். பகவானுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வெளிக்கதவை பூட்டினேன்.

வாழ்க்கையிலே முதன் முதலாக காதல் கடிதம் படிக்கப் போகிற ஆனந்தத்தில் துள்ளிக் குதித்து ஓடிவந்தேன். காதல் கடிதம் எப்படி இருக்கும்? உள்ளே என்னென்ன எழுதப்பட்டிருக்கும்? ரம்பையே! ஊர்வசியே! என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கும்! வெறும் தாளில்தான் காதல் கடிதம் எழுதப்படுகிறது; ஆனல், அதிலே இருக்கிற இன்பம் வியாபாரத்திலே லட்சலட்ச

மாக லாபம் கிடைப்பதற்கு சம மாகும். வியாபாரிகள் கொடுக்கிறார்களே செக்—அது கையளவு உள்ள வெறும் தாள் தான். ஆனால் அதன் மதிப்பு? அதைப் போன்றதுதான் காதல்கடிதமும். பாட்டி வருவதற்குள் பலமுறை படித்துப் படித்து பார்க்கவேண்டும் என்று முடிவு கட்டி, கடிதம்வைத்த இடத்திற்குவந்தேன்.

கடிதத்தை எடுக்க பானை இடுக்கில் கையை விட்டேன். 'நறுக்' என்று ஏதோ ஒருமுள் குத்தியது. உடனே கையை உருவிக்கொண்டேன். ரோஜாவுக்குத்தான் முள்உண்டு; காதல் கடிதத்திற்கும்முள்இருக்குமோ?

கை காந்தல் எடுக்க ஆரம்பித்தது. கருவேலம் முள் குத்தினால்கூட இவ்வளவு வேதனை இருக்காது; ஆனால் காதல்கடித முள் ஒரே கடுகடுப்பை உண்டாக்கியது.எரிச்சலாகஇருந்தது. கடுகடுப்பு, கையிலே இருந்து, மணிக்கட்டிற்கும், புஜத்திற்கும், தோளுக்கும் வந்துகொண்டே இருந்தது. என் உடம்பெல்லாம் வியர்த்தது. வலியை என்னால் தாங்க முடியவில்லை. சப்தம் போட்டு அழவேண்டும்போல இருந்தது. ஆனாலும் காதல் கடிதத்தைப் படிக்க வேண்டுமே என்ற ஆவலும் இருந்தது. இன்னொரு கையை விட்டு எடுக்கலாம் என்ற எண்ணத்தோடு மெதுவாகக் குனிந்தேன். அந்த இடுக்கிலே ஒரு பெரிய தேள் இருப்பதைக் கண்டேன்.

வலிக்குக்காரணம் முள் அல்ல, தேள் என்று உணர்ந்ததும், வேதனை அதிகரித்தது. ஐயோ, அம்மா என்று என் வாய் அலறியது. என் பாட்டி கதவைத் தட்டினாள். அழுதுகொண்டே சென்று கதவைத் திறந்தேன். "என்னம்மா என்ன சங்கதி?" என்று என் பாட்டி கேட்டாள். "தேள் கடித்துவிட்டதுபாட்டி" என்று பல்லைக் கடித்துக்கொண்டே சொன்னேன். "தேளை அடித்துவிட்டாயா? தேளை எங்கே?" என்று என் பாட்டி கேட்டாள்.

எனக்கு திடுக்கென்று இருந்தது. தேள் கடித்த சங்கதியை ஏன் சொன்னோமென்று இருந்தது. தேள் எங்கே என்று பாட்டி கேட்கிறாள். தேள்இருக்கிற இடத்தைச் சொன்னால், தேளை அடிக்கப்போகிற பாட்டி கையில் காதல்கடிதம் கிடைத்துவிட்டால்......? எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தேளை அடிக்க அடுத்தவீட்டு ஆட்களையும் அழைத்து வந்துவிட்டாள் பாட்டி. திருடனைப் பிடிக்க வந்தவர்களைப்போல, தேளை அடிக்க ஆட்கள் வந்தார்கள். இந்தக் கூட்டத்தில் காதல் கடிதம்சிக்கினால், மானம்—மதிப்பு எல்லாம் போய்விடுமே என்ற பீதியில், அலறிக்கொண்டிருந்

தேனேதவிர, தேள் இருக்கும் இடத்தைச் சொல்லவே இல்லை.

என் அழுகைச் சப்தம் வெளியே பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டதோ என்னவோ, அந்தக் கூட்டத்திலே, "என்ன? என்ன?" என்று விசாரித்துக் கொண்டே ராமரும் வந்துவிட்டார். "என்ன பாட்டி?" என்று கேள்வியைப்போட்டார். "ஜானகிக்குத் தேள் கடித்துவிட்டது" என்று என் பாட்டி சொல்ல, "தேளா? எங்கே?" என்று என் ராமரும் கேட்டார். நான் பதில் சொன்னால் அவருடைய மானமும் பறிபோகுமே என்பது அவருக்குத் தெரியவா போகிறது. தேள் இருக்கும் இடத்தை மீண்டும் மீண்டும் எல்லோரும் கேட்க ஆரம்பித்தார்கள்.

இனி என்னசெய்வது? வேறு வழியின்றி இடத்தைச் சொல்ல முடிவு செய்தேன். வலியைத் தாங்கிக்கொண்டு கூடவேசெல்ல முடிவு செய்தேன். இதற்குள் தான் என்று சொல்லி இடுக்கைக் காண்பித்தேன். கையிலே சூட்டுக்கோலோடுநின்ற ஒருவன் பானையை மெதுவாகத் தூக்கினான். திடுக்கிட்டேன்—தேள் இருந்தது, கடிதத்தைக் காணவில்லை.

கடிதம்எங்கே? யார் எடுத்துவிட்டார்கள்? இரவோடு இரவாய் படிக்கத் தெரியாத பாட்டி எடுத்துவிட்டாளா? அதுஎன்ன என்று படித்துத் தெரிந்துகொள்ளத்தான் பாட்டி எதிர் வீட்டுக்குப் போனாளா? எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

ராமர் தன் வீட்டிலிருந்து ஒரு மருந்து எடுத்துவந்து கடிவாயில் மருந்து போட்டார். ஜில் என்று இருந்தது. ஆனால் என் உள்ளம்? அலைமோதியது. என் பாட்டி முகத்தில் நேரடியாக விழிக்க என் நெஞ்சில் துணிவில்லாமல் இருந்தது. ஓய்வு எடு என்று சொல்லிவிட்டு என் ராமர் போய்விட்டார். அவருக்கு நான் பதில் எழுதவேண்டுமே, எதைவைத்து எழுதுவது? கடிதம் என் பாட்டி கையில்தான்சிக்கியதா? அல்லது வேறு எவர் கையிலும் சிக்கிவிட்டதா? பாட்டி கையில் கிடைத்திருந்தாலும் கெட்ட பெயர் வீட்டோடுஇருந்துவிடும்? வேறுயார் கையிலும் சிக்கியிருந்தால்......தேள்கொட்டிய நேரத்தில் வியர்த்ததைவிட அதிகமாக மனமும் உடம்பும் புழுங்கியது. பேய் பிசாசுகள் என்று சொல்கிறார்களே, அவைகள் எடுத்துச் சென்றிருக்குமோ? பலவாறான கேள்விகள் என்னைக் குத்திக் கொண்டே இருந்தன. எதற்கும் என்னால் பதில் சொல்லவே முடியவில்லை.

(தொடரும்)

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

[ஒருவர் 3 கேள்விகள் கேட்கலாம். கேள்விகள் நீளமாக இல்லாது சுருக்கமாக, பிறருக்கு பிரயோஜனப் படத்தக்கதாக இருக்கவேண்டும்]

கமலம், கம்பம்.

கே: வயது வந்த பெண்களுக்கு சிறந்த ஒரு நல்லொழுக்கம் கூற வேண்டுகிறேன்.

ப: சினிமா சிங்காரிகள் போன்று இல்லாது, மேல் ஆடையைத் தமிழ்ப் பெண்கள் ஒவ்வொருவரும் அடிக்கடி கவனித்து ஒழுங்கு படுத்திப் பொதுஇடங்களில் புழங்க வேண்டும்.

கே: பெண்ணிற்குப் பெருமை தேடிக் கொடுப்பது எது?

ப: கற்பு.

மு. இப்ராகிம், மதுரை.

கே: நாகரீகத்தின் முதல்படி எது? கடைசிப்படி எது?

ப: நம்மை நாமே உணர்ந்து செயலாற்றத் தொடங்குவது முதல் படி. பிறர் கூறியும் புரியாது புறக்கணித்துப் போவது கடைசிப்படி.

இராமானுசன், குல்லலக்குண்டு.

கே: படித்தவர்களைப் பார்க்கிலும், படிக்காதவர்கள் நல்லவர்கள் என்று ராஜாஜீ சொல்வது சரியா?

ப: புளித்த எப்பக்காரர் கூறும் வார்த்தை இது. தான் இப்பொழுது பிரதமராக வந்த முறை 'படித்தவன் செய்கை' என்று அவரது அந்தராத்மா குத்துகிறது போலும்.

எம். வி. ஏ. கரீம், மதுக்கூர்.

கே: நான் ஒருவனை நம்பிஇருந்தேன். அவன்ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டான். அவனை என்ன செய்தால் தகும்.

ப: உடைந்தமண்கலம் ஒன்று சேராது. நடந்ததை மறந்து மன்னித்துவிடுங்கள். இனி எச்சரிக்கையாக நடந்துகொள்ளுங்கள்.

ஆர். செல்லத்துரை, மதுரை.

கே: அனுபவம்என்றால் என்ன? ஆராய்ச்சி என்றால் என்ன?

ப: பழகிய ஒன்றைச் கூறுவது அல்லது செய்வது அனுபவம். புதிய ஒன்றைக் கண்டு பிடிக்க முயல்வது ஆராய்ச்சி

விஞப்பித்தன், அச்சுவேலி. (சிலோன்)

கே: எத்தகைய குறைபாடுமில்லாமல் பொதுமக்கள் வாழும் ஓர் நாட்டில் அரசியல் வாதிக்கு என்ன வேலையிருக்கும்?

ப: கொல்லன் பட்டரையில் ஈக்கு என்ன வேலை? இருந்தாலும், வேலை செய்பவரின் முகத்தில் உட்கார்ந்து தொந்தரவு கொடுக்கும் ஈயைப்போல, தங்கள்பிழைப்பிற்கு வழிஇருக்கிறதாஎன்றுபார்ப்பார்கள்

கே: வைதீகத்தில் அளவுகடந்த நம்பிக்கையுள்ள ராஜாஜி நாஸ்திகக்

கட்சிகளை அழிக்க யாகம் வளர்த்தாலென்ன?

ப: வைதீகத்தில் நம்பிக்கை இருந்தால் தன் மகளுக்கும், காந்தி மகனுக்கும் கலப்புமணம்செய்வதில் ஈடுபட்டிருக்க மாட்டார். யாகம் புராண காலத்தில்தான் செல்லும். இதை அவர் நன்கு உணர்வார்.

கே: நீர் திடீரென்று ஓர் நாட்டின் சர்வாதிகாரியானால் உமது முதல் வேலை எதுவாக இருக்கும்?

ப: திடீரென்று கண்விழித்து கண்டது கனவு என்று நிம்மதி கொள்வேன்.

தமிழ்மணி, விருத்தாசலம்.

கே: நான் ஒருபெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைக் காதலிக்கிறாளா என்பதை எவ்விதம் அறிவது?

ப: நீர் கொண்டது காதல் அல்ல, உமது மனவிருப்பம். ஆண் பெண் இருவர் கருத்தொருமித்தது தான் காதல்.

கே: தென்னாட்டு பெர்னாட்ஷா யார்?

ப: அறிஞர் அண்ணா என்று கல்கியார் கூறுகிறார். ஆனால் இதை இங்கிலாந்துவாசிகள் கூறும் சந்தர்ப்பம் ஏற்படவேண்டும்.

கா. ராமர், முத்துலிங்காபுரம்.

கே: படித்திருந்தும் உத்தியோகம் கிடைக்காத காரணம் என்ன?

ப: படித்த காரணத்தால் தொழிலில் கௌரவம் பார்ப்பதினால்தான்.

கே: பிறந்து எட்டுதினங்களாகியும் தன் தாயிடம் பால் குடிக்காத குழந்தை பூசாரியிடம் திருநீறு வாங்கிப் போடவும் பால் குடிக்கிறதே மர்மமென்ன?

ப: மர்மம் ஒன்றுமில்லை, மாந்தம் இருந்திருக்கும். காக்கை ஏறி பனம் பழம் விழுந்ததுபோல் சந்தர்ப்பமும் அமைந்திருக்கும். மேலும் ஆரம்பத்தில் சுரக்கும் தாய்ப் பாலில் ருசி இருப்பதில்லை என்றும் டாக்டர்கள் கூறுகிறார்கள். சுடுபால் பட்டு ஓட்டமெடுத்த பூனை பின் குளிர்பாலைக் கண்டாலும் ஓடுவது போலும் இருக்கலாம். இது சாதாரணமாக அநேக குழந்தைகள் விஷயங்களில் நடைபெறுகின்றது.

டி. செல்வரத்தினம், தூத்துக்குடி.

கே: நம் நாட்டில் சமுதாயத்திலும், அரசியல்வாழ்விலும் தேடாத் திருடர்கள் காணப்படுகிறார்களே, இவர்கள் அம்பலம் ஆகும் காலம் வருமா? வாராதா?

ப: பகுத்தறிவு கொண்டு, ஆராய்ந்து பார்க்க பொதுமக்கள் கிளம்பிவிட்டால் பறந்துவிடமாட்டார்களா இப்புல்லுருவிகள்.

அ. சோணை, மதுரை.

கே: இன்றையநாட்டுக்கு பேனா முனை தேவையா? வாள்முனை தேவையா?

ப: அறிவு முனையும் ஆஸ்தி முனையும் தேவை.

கே: எழுத்தாளர்கள் இறந்த பின் புகழ்அடையக் காரணம்யாது?

ப: மறுமலர்ச்சி எழுச்சி இன்று மக்களிடையே பாடப்படுவதால், சிறந்த எழுத்தாளர்கள்விட்டுச்சென்ற ஏடுகள் ஆராய்ச்சி வயப்பட்டு, அன்றைய மக்கள் செய்யத் தவறியதை இன்று நிறைவேற்றுகின்றனர்.

கைத்தறி

3வது ஆண்டு தீபாவளி மலர்

முத்தண்ணகுளம்தெரு,

கோயமுத்தூர்.

பல அறிஞர்களின் கவிதை, கட்டுரைகளுடன், வெள்ளைத் துணியை சிட்டியாகவும், சேலையாகவும் மாற்றும் கைத்தறித் தொழில் எவ்வாறு இயங்குகிறது என்பதை ஆரம்பமுதல் முடிவு வரை புகைப்படங்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

* * * *

போர்க்களம் (வார இதழ்)

ஆசிரியர்: V. C. அர்ச்சுனன்,

சேண்பாக்கம், வேலூர். (வ.ஆ.)

விலை அணு 1

திராவிட நாடு பெற போர்க்களம் அமைத்துள்ள பத்திரிகைப் படை வரிசையில் புதிதாகப் புகுந்துள்ள வாரப் பத்திரிகை.

* * * *

தர்பார்

கூத்தாநல்லூர்

இஸ்லாமியப் பிரசாரம், சமூக சீர்திருத்தம், ஊர்நலன் பேணல் முதலியவற்றை அறிக்கைகள் மூலம் வெளியிட முன் வந்துள்ளது.

* * * *

கலைச்சுடர்

(இலக்கிய மாத வெளியீடு)

ஆசிரியர்: எம். கே. நடராஜன்

அட்டன் (இலங்கை)

ஆண்டுச் சந்தா ரூ. 3—0—0

தனி இதழ் 25 சதம்

சிறந்த கதை, கட்டுரைகளுடன், தமிழ் மொழியின் சிறப்பிற்குப் பெரிதும் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

* * * *

நிறைகுடம் (மாதஇதழ்)

ஆசிரியர்: M. K. தீனதயாளன்

கூட்டாசிரியர்:

இராதா—இளமாறன்

16, திருப்பள்ளித் தெரு,

சென்னை-1.

ஆண்டுச் சந்தா ரூ. 3—0—0

தனி இதழ் 0—4—0

சிறந்த கட்டுரை, கதைகளுடன் தமிழ் நாட்டிற்குப் பணி புரியப் புறப்பட்டிருக்கும் புதியதொரு மாதப்பத்திரிகை.

38வது அத்தியாயம்
ஜெகதீஸ் குற்றவாளி!

பிடிபட்ட இந்திய சுதந்திர படையினரை மூன்று பிரிவாகப் பிரித்தார்கள். ஒன்று ஜப்பானியரின் நிர்ப்பந்தத்தால் பிறர் தூண்டுதலுக்குட்பட்டு சேர்ந்தவர்கள். இவர்களிடம் தாராளமாக நடந்துகொள்வதென்று முடிவு செய்தார்கள்.

இரண்டாவது ஜப்பானிய லட்சியத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அவர்களின் கையாட்களாக வேலைசெய்தவர்கள். இவர்களை ராணுவ கோர்ட்டில் விசாரிக்க முடிவு செய்தார்கள். வக்கீல்கள் வைத்து வாதிட இவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது.

மூன்றாவது ஜப்பானியரின் ராணுவ ரகசியங்களை அறிந்து, நேசப் படைகளுக்கு உதவும் வகையில் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்க முடிவு செய்தனர்.

மேற்கண்ட தீர்மானத்திற்கிணங்க, ஜெகதீஸ், சரோஜா நிலைமை பற்றி முடிவு செய்ய அவர்கள்இருவரும் மற்றும்இவர்களைப்போலவே உயர்ந்த அதிகாரத்தில் இருந்த அநேகரும் ராணுவ பந்தோபஸ்துடன் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், இந்திய தேசிய ராணுவத்தில்இருந்த ஷாநவாஸ் தில்லான், ஷைகால் முதலியோர்களாவார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தினரின் விசாரணைகள் தலைப்பில் புகைப்படமாக உள்ள டெல்லி செங்கோட்டையில் நடைபெறத் தொடங்கியது. சரோஜா நர்ஸாக வேலைபார்த்து வந்தபடியாலும், பெண் என்றதாலும் அவளுடைய நிலைமை தீர விசாரிக்கப்பட்டு, அவள், முதல் தீர்மானப்படி விடுதலைசெய்யப்பட்டாள் ஆனால் ஜெகதீஸின் நிலைமை அப்படி இல்லை அவன் எவ்வளவோ தனது நிலையை எடுத்துக் கூறினன். சரோஜாவும் உண்மையை எடுத்துக்கூறினள். பலனொன்றும் கிட்டவில்லை. அவன் இரண்டாவது பிரிவுப்படி, ஜப்பானின் கையாளாக வேலைபார்த்ததாகக் கருதப்பட்டு விசாரணை நடைபெற ஏற்பாடாகியது.

இவ்வித முடிவிற்கு அவர்கள் கூறிய காரணமும் சரியாகவே இருந்தது. அதாவது, தீஸின் தலைமையில் போராடிய நேசதேச பட்டாளம் ஜப்பானியரால் வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சில வாரங்களுக்குப்பின், தீஸ் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து பொறுப்புள்ள பதவிவகித்துப் படைகளை நடத்திச் செல்வதாக ஜப்பான் ரேடியோக்கள் ஒலிபரப்பிவிட்டன. இந்தச் செய்தியை ராணுவ கோர்ட் கூறியபொழுதுதான் தீஸிற்குத் தெரியவந்தது. தான் படுக்கையில் கிடந்த காலத்தில் தன்னைப்பற்றி ஜப்பானியர் கட்டிவிட்டசெய்தி ஒன்றைக்கொண்டு தன் நிலை இவ்வளவு பாதிக்கப்பட்டிருப்பதை எண்ணிக் கலங்கினன்.

சரோஜா அவனுக்குத் தைரியம் கூறி, விரைவில் தன் தகப்பனர் வக்கீல் அரியநாதரைச் சந்தித்து கேஸ் நடவடிக்கைகளை கவனிக்கச் சொல்வதாகக் கூறி விடைபெற்றுச் சென்றுள்.

39வது அத்தியாயம்

கதைப்போக்கில்உலகநிலை!

ஐரோப்பிய யுத்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும்போது, அதாவது 1944 இறுதியில் மகாத்மா காந்தியும் மற்றும் சிலரும் விடுதலையடைந்தனர் இந்தியாவில்.

ஜெர்மன் யுத்தமும் முடிவு பெற்றது. கிழக்கே ஜப்பான்யுத்தத்தை விரைவில் முடிக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கையிலேயே அமெரிக்க ஜனுதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் 12-4-45ல் காலமானுர். அதையொட்டி அவருக்கு உதவியாக இருந்த ட்ரூமன் ஜனுதிபதியானுர்.

இதே நேரம் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடந்ததில், யுத்த காலத்தில் ஆட்சிசெய்யத் தகுதிபெற்றவரேதவிர, சமாதான காலத்தில் நிர்வாகம் செய்யத் தகுதியற்றவர் என்ற தோரணையில் பிரதம மந்திரி சர்ச்சில் கோஷ்டி தோற்கடிக்கப்பட்டு,

அட்லி தலைமையில், தொழிற் கட்சிசர்க்கார் பதவிக்குவந்தனர்.

இந்திய வைசிராயாக இருந்த லார்டுவேவல், இந்தியாவிலும் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் முறையில் 25-6-1945ல் சிம்லா மகாநாட்டைக் கூட்டினார். இதையொட்டி 1945 ஜூன் 15ல் ஜவஹர் முதலிய தலைவர்களை—1942 ஆகஸ்டில் கைதானவர்களை—நிபந்தனையின்றி விடுதலை செய்து மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டார்கள்.

இவ்விதம் தலைவர்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்கு வழி வகுத்துக்கொண்டிருந்த நாளில் தான், இந்திய தேசிய ராணுவத்தினரில் முன்னணியில் நின்ற வீரர்களின்விசாரணையும்டெல்லி செங்கோட்டையில் 7-11-45ல் இராணுவக் கோர்ட்டின் முன் வந்தது. இந்தியமக்கள் கவனம் பூராவும் டெல்லிசெங்கோட்டையில்தான் இருந்தது என்று கூறினால்கூட மிகையாகாது.

40வது அத்தியாயம்
டில்லி செங்கோட்டை விசாரணை!

நுழைவுச் சீட்டுப் பெற்றவர்கள்தான் இராணுவ கோர்ட்டின் நடவடிக்கைகளைக் கவனிக்க அனுமதிக்கப்பட்டார்கள். காலை மணி 10. கோர்ட்டில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அப்பொழுது இராணுவ ஜட்ஜ்கள் வந்து தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். சர்க்கார் வக்கீல் ஸர். என். பி. என்ஜினியர், தனது ஆசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தார்.

இவருக்கு எதிர் வரிசையில், கைதிகளுக்காக எதிர் வாதிட வந்து அமர்ந்திருந்தவர்களின் பக்கம்தான், அங்கு வந்திருந்தோரின் கவனம் பூராவும் சென்றது. அப்படி அங்குவீற்றிருந்தவர்கள் யார்? எண்ணற்ற வழக்குகளில் வாதிட்டு, வாகை சூடி, அளவற்ற பணம் திரட்டிய நிலையில் தேச நலத்திற்காக தன் வாழ்நாட்களை சுகபோகங்களிலிருந்து விடுவித்து, வக்கீல் தொழிலையே நிறுத்தி, ஓய்வு பெற்றுவந்த திரு. புலாபாய் தேசாய், ஞானஒளி வீச வீற்றிருந்தார். அவர் மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே சுருட்டி, பொட்டலம் கட்டி, எங்கோ கண்காணாத இடத்தில் வைத்திருந்த தனது கருப்பு பாரிஸ்டர் அங்கியை திரும்பத் தேடிஎடுத்து அணிந்துகொண்டு வீற்றிருந்தார் 'எனது வாரீசு' என்று மகாத்மா காந்தியவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியாவின் மாணிக்கம் நேரு. இருவரையும் சுற்றி உதவிக்காக பல வழக்கறிஞர்கள். அவர்களில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர் ஒருவரும் உண்டு. அவர் வேறுயாருமில்லை, நம் சரோஜாவின்தந்தை வக்கீல்

அரியநாதர்தான். வரப்பை உடைத்துச் சிதறி ஓடும் தண்ணீர்போல, சிதறுண்ட தன் குடும்பக் கவலையால் வக்கீல் தொழிலையே நிறுத்தி இருந்த அரியநாதர், தான் இனிக் காணவேமுடியாது என்றிருந்தபோது தன் மகள் சரோஜா திரும்ப வந்து சேர்ந்து, தன் நிலையைக் கூறி, ஜெகதீசை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை சிரமேற்கொண்டு, வாதிட வந்திருந்தார்.

பார்வையாளர் வரிசையில், ஜெகதீஸின் தந்தை சம்பந்தர், அடுத்து சாருபிணி, அவளை அடுத்து சரோஜா மூவரும் வீற்றிருந்தார்கள் என்று கூறவேண்டியதில்லை. இங்நிலையில் கோர்ட்டில் ஒரேபரபரப்பு ஏற்பட்டது. எல்லோருடைய கவனமும் ஒரே திக்கில் பாய்ந்தது. முன்னும் பின்னும் துப்பாக்கி ஏந்திய இராணுவப் போலீஸார் பாதுகாத்துவர, கைதிகள்நான்குபேர்—ஷாநவாஸ், தில்லான், ஷைகால் ஜெகதீஸ்—கம்பீரமாக முக மலர்ச்சியுடன் வந்துகொண்டிருந்தார்கள்.

விசிட்டர்கள் காலரியில் இருந்தவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. கைதியாக கொண்டு வரப்பட்டிருப்போரின் உறவினர்களின் மத்தியில் இருந்துதான் சப்தங்கள் ஏற்பட்டன. ஜெகதீஸைக் கண்டபொழுது சாரு 'அண்ணா' என்று வாய்விட்டுக் கதறிவிட்டாள். ஆனால் அருகிலிருந்த சரோஜா சப்தம் பரவும் முன், தன் கையால் அவள் வாயைப் பொத்தி, எச்சரிக்கை செய்தாள். சம்பந்தரின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியோடிக்கொண்டிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பின்னும், தன் மகனை இங்நிலையிலா காணவேண்டும் என்ற எண்ணம் அவரை வாட்டியது. சரோஜா திடமாகக் காணப்பட்டாலும், மனதிற்குள் ஆயிரம்கடவுள்களை வேண்டிக்கொண்டாள் ஜெகதீஸ் விடுதலைக்காக.

சர்க்கார் வக்கீல் எழுந்து ஒவ்வொருவருக்கும் தான் தயார் செய்து வைத்திருந்த குற்றப் பத்திரிகையை வாசித்து முடித்தார். எதிரிகளுக்காக வந்திருந்த திரு. புலாபாய்தேசாய் அவர்கள் எழுந்து, எதிரிகள் அனைவரின் சார்பாக இரண்டுவார அவகாசம் கேட்டார். அவ்விதமே கொடுக்கப்பட்டு திரும்ப இரண்டுவாரம் கழித்து கோர்ட் கூடுவதென ஜட்ஜுகள் முடிவுசெய்தார்கள்.

41வது அத்தியாயம்
செவிடன் காதில் ஊதிய சங்கு

இரண்டு வார இடைக்காலத்தில் எதிர்த்து வாதிடவேண்டிய விஷயங்கள் குறித்து ஆராய நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்தன வக்கீல்களுக்கு. அத்துடன் நாட்டு மக்களின் கவனத்தைப்

பூராவும் அனுதாபத்துடன்இவர் கள்மீது பாயும் பிரச்சாரங்களும் நிகழ்த்தப்பட்டன.

"தாய்நாட்டின்மீது கொண்ட தீவிர பக்தியே இவ்விதம் இவர்களைத் தூண்டியது. யுத்தப் முடிந்துவிட்டது. இவர்களால் இனி யுத்தம் பாதிக்கப்படமாட்டாது. ஆனால் சமாதானத்தைப் பாதிக்காதவகையில், இந்தியரின் நல்லெண்ணத்திற்கு பாத்திரமாகாமல் போய்விடும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். கடுமையான தண்டனைகள்கொடுக்கக்கூடாது" இப்படி ஜவஹர் சுட்டிக் காட்டினார். ஊர்ஊருக்குக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, மக்களின் குரல் அரசினரின் காதில் விழும்படி முழங்கப்பட்டன.

ஆனால் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது. தீஸிற்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. காணமற் போனஒன்று கிடைக்கப்பெற்று மீண்டும் கைநழுவுவதென்றால் அதனால் ஏற்படும் துக்கம் கூறத் தரமன்றுதான். சாரூவும் அவள் தந்தை சம்பந்தரும் பட்டஅவஸ்தை கூறமுடியாது. இவர்கள் துக்கத்தை எல்லாம் கடலில் பெருங்காயம் கரைத்தமாதிரியாக்கிவிட்டது சரோஜாவின் துயர்.

தீஸை அடைவதற்காக அவள் மேற்கொண்டவேஷங்கள், ஆடிய நாடகங்கள் எல்லாம் கண்முன் நின்று மரணகீதம்பாடுவதுபோல் இருந்தது. தன் பிறப்பிலேயே குறையிருப்பதாக எண்ணித் துடித்தாள். உயிரைப் போக்கிக் கொள்வதைத்தவிர வேறு வழியே அவள் மனதில் படவில்லை.

அரியநாதர்பற்றியோ கேட்கவேண்டாம். தன் மகளுக்கு நேர்ந்தகதியையும், மகன்பற்றிய நிலையும் அவரது தள்ளாத வயதிற்கு பெரும் சோதனையாகவே இருந்தது. இருந்தாலும் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, தன் மகளையும் ஒருவழியாகச் சமாதானப்படுத்தினார். சமீபத்தில் இந்திய சுதந்திரம் குறித்து இங்கிலாந்திலிருந்து இந்திய மந்திரி லார்டு பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஏ. பி. அலெக்ஸாண்டர்முதலிய மூன்று மந்திரிகள் வருவதால் சுதந்திரத்திற்கு ஏதாவது வழிபிறந்தால், அதன்பின் இந்தியத் தலைவர்களின் முயற்சியால் இந்தியத் தேசிய ராணுவத்தினரும், மற்றுமுள்ள அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படலாம் என்று கூறி சாரூ, சம்பந்தர் முதலியவர்களையும் தேற்றிவந்தார்.

42வது அத்தியாயம்
விடுதலை!

அரியநாதர் எண்ணியதும் வீண்போகவில்லை. 1946 ஜனவரியில் இந்திய சேனாதிபதி ராணுவக்கோர்ட்டாரால் ஆயுள் தண்டனைபெற்ற கைதிகளை விடுதலை செய்தது இந்திய சுதந்திர நடவடிக்கைகளில் ஆங்கிலேயர்

எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெருக்குவதற்கு உதவியாக இருந்தது.

ஜெகதீஸ் விடுதலை செய்யப்பட்டு வீடு திரும்பினான். இந்திய தேசீய ராணுவத்திற்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் உள்ளதுபோல. ஆனால் இன்று பிரமாதமான வரவேற்பு. ரயில்வே ஸ்டேஷனில் ஊரே திரண்டு வந்ததென ஒரே கூட்டம். மலர் தோட்டமே அங்கு வந்ததென மலர் மாலைகள். நிருபர் பேட்டிகள்; போட்டோக்கள்; இப்படி ஓயாத கூட்டம் வீட்டில். பத்திரிகைகளிலே அமர்க்களம். இத்தனைக்கும் அவன் மனது மட்டும்குத்திக்கொண்டது. இவ்வளவு தூரம் கவர்ண்மெண்டே தன்னை உயர்த்திவிட்டதைநினைத்துக்கொண்டால் சிரிப்புத்தான் அவனுக்கு வந்தது.

மாண்ட உயிர் மீண்டதுபோலவும், பிறவிஊமை பேசும்நாவைப் பெற்ற நிலையுமாக எண்ணி துள்ளிக் குதித்தோடி தன் அப்பாவின் கழுத்தைச் சிறுகுழந்தை போல் தாவிக் கட்டித் தொங்கி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் சரோஜா. அவர் கண்களிலும் நீர் பெருக்கெடுத்தோடியது.

இடையில் பார்வையிழந்த தனது இருகண்மணிகளில் ஒன்று ஒளிபெற்றதால் ஆனந்தமும், அதேநேரம் மற்றொரு கண்மணி —சேகர்— அடைபட்டுக் கிடப்பதால் நேர்ந்த வருத்தமுமாக மாறிமாறி அரியநாதரது மனதை அலட்டியது.

சாருவிற்கு தன் அண்ணனின் விடுதலை மகிழ்ச்சி அளித்தது என்றாலும் அடுத்தகணம் அவளது சுயநலம் அதை மறைத்துவிட்டது. தன் மனதில் வரித்த மணவாளன் சேகரும் விடுதலையாகிவந்து தன்னை மகிழ்விப்பாரா என்ற எண்ணம் தலைதூக்கி நின்றது. இவள் இப்படி மனதில் நினைத்ததை வெளிப்படையாகவே கூறிவிட்டார் அவளது தந்தை சம்பந்தர்.

அன்று பத்திரிகைகளில்வெளிவந்த செய்தி அவர்கள் அனைவருக்கும் ஒரு நம்பிக்கையை ஊட்டியது. சமீபத்தில் தேசமெங்கும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸார் நேரடியாகக் கலந்து மாகாணங்களில் மந்திரிசபை அமைப்பதென்ற முடிவு செய்திருந்தனர்.

தேர்தலும் நடைபெற்றது. பலமாகாணங்களில் காங்கிரஸார் மந்திரி பதவிகளைப் பெற்றார்கள். சென்னையிலும் 1946 ஏப்ரல் 30உ திரு. பிரகாசம் முதல் மந்திரியானார்.

1946, ஏப்ரல் 25உ இந்தியா வந்த பிரிட்டிஷ் மந்திரிகளின் முயற்சியால், இந்தியாவிற்கு சுதந்திரப் பாதை வகுக்கப்பட்டு, அரசியல் நிர்ணய சபையும் கூடுவதற்கு தேதி குறிக்கப்பட்டது.

சென்னையில் மக்கள் சர்க்கார் ஏற்பட்டவுடன் முதல்வேலையாக 1942 ஆகஸ்ட் கலவரத்தின் போது கைது செய்யப்பட்டு ஜென்ம தண்டனை பெற்றவர்கள் மீது திருஷ்டி திரும்பியது. குலசேகர பட்டணம் உப்பு டிப்போ அதிகாரி கொல்லப்பட்டது காரணமாக தூக்குத் தண்டனை பெற்றிருந்த காசிராஜன்—ராஜகோபாலன் முதலியோரது கேஸ்கள் மக்கள் கிளர்ச்சியின் காரணமாக, பிரிவு கௌன்சிலில் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வந்தவர்களை 1946 மே கடைசியில் விடுதலை செய்தார்கள். அதேநேரம் நமது சேகரின் விஷயத்திலும் மந்திரிசபையார், கவர்னருடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெரும் பிரயாசை செய்து விடுதலைசெய்தார்கள். I. A S படித்து வந்தவனுகையால், பிரமாதமான வரவேற்புக் கிடைத்தது. தியாகிகள் வரிசையில் முதலாவதாகக் கருதப்பட்டான் சேகர்.

43வது அத்தியாயம்

காதற் கடலில் களிப்புப் படகு!

நாதஸ்வரக் கச்சேரி பிரமாதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது மேடையின் ஒருபக்கத்தில். திருவாவடுதுறைராஜரத்தினமும் திருவெண்காடுசுப்பிரமணியமும் ஒரே மேடையிலிருந்து வாசிக்கிறார்கள் என்றால் சங்கீதப் பிரியர்களின் 'சபாஷ்' சொல்லிற்கும், ஆட்டு உரலில், குழவிக்கல் சுற்றி வருவது போன்ற தலை உருட்டல்களுக்கும் கேட்கவாவேண்டும். காதற் கடலில் களிப்புடன் செல்லும் வாழ்க்கைப் படகில் இன்பப் புயல் வீசியதுபோல் இருந்தது இந்நிகழ்ச்சி. ஜனசமுத்திரமோ என்று கூறும்படி இருந்தது கூட்டம்.

தன்னிடம் ஓயாது வந்து அடைக்கலம் புகும் நதிகளைப் பார்த்து, இனி இடமில்லை என்று சொல்லாத சமுத்திரம்போல் மேலும் மேலும் வரும் திரளான மக்களை முன்வாசலில் நின்று காமு, அரியநாதர், சம்பந்தர் ஆகியமூவரும் கைகூப்பிவணங்கி வரவேற்றுக்கொண்டிருந்தார்கள் இவர்களுக்கு ஒத்தாசையாக சந்தனமும், ரோஜா மலரும், பன்னீரும் வருவோரை குளிர்மணங்களால் மகிழ்விக்க, வரவேற்புக் குழுவினராகக் காட்சியளித்தன.

நாளோ ஞாயிறு. நேரமோ மாலை விடுமுறையானபடியால் சகல உத்தியோகஸ்தர்களும் வந்துவிட்டார்கள். தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள் கட்சி பேதமின்றி அனைவருமேமேடையில் அமர்ந்திருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம். இக் கண்கொள்ளாக் காட்சி பூராவும் நம் சேகர்—சாரு, ஜெகதீஸ்—சரோஜா திருமண வைபவத்திற்குத்தான்

என்று நாம்கூறவேண்டியதில்லை. சாதாரண திருமணமல்ல, சீர்திருத்தத் திருமணம். அதிலும் ஒன்று விதவா விவாகம். மணமகன் இருவரும், அகிலஇந்திய மக்களின் கவனத்திற்குட்பட்டவர்கள். இந்நிலையில் கேட்கவா வேண்டும் கூட்டத்திற்கு!

சரியாக மணி 5 அடித்ததும், ஜோடி ஜோடியாக மணமக்கள் மேடையில் தோன்றினார்கள். கூட்டத்தின் ஆரவாரத்திற்கு அளவேகிடையாது. கூடி இருந்த மக்களைச் சாட்சியாகக்கொண்டு மணமக்கள் மலர்மாலையும் மோதிரமும் ஒருவருக்கொருவர்மாற்றி மிகச் சுருக்கமாக தங்கள் வாழ்க்கைஒப்பந்தங்களைக் கூறினார்கள்.

விற்பனையாகிறது!
கருத்துக் கலைஞர்
மு. கருணாநிதியின்
ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின்
ஓரத்துக்கே ஓடினாள்
“பராசக்தி”
அழகுமிக்க அட்டை!
அதிக பக்கங்கள்!
முழுவசனம்!
முற்போக்குப் பாடல்கள்!
சிந்தைக்கு விருந்தளிக்கும்
வசன காவியம்.
விலை அணா 8தான்!
கழிவு 25% செலவு இனம்
தனி இதழுக்கு
9 அணா தபால்தலை அனுப்பவும்.
செல்வம் பதிப்பகம்,
வெண்கலக்கடைத்தெரு, மதுரை.

அவர்களைப் புகழ்ந்து வந்திருந்த தலைவர்கள் வாழ்த்துக்கூறினார்கள். பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள வெகுமதிகள் தம்பதிகளுக்கு வழங்கப்பட்டன. மணமக்களின் பெற்றோர்கள் வந்திருந்தோர் அனைவருக்கும் நன்றிதெரிவித்தார்கள்.

“இப்படிப்பட்ட பணக்காரர்களும், அந்தஸ்துப் பெற்றவர்களும், துணிவுடன் இவ்விதம் விதவா விவாகத்திற்கு முன்வந்தால்தான் நாட்டில் விதவைகளின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்து, அவர்களது இருண்ட வாழ்வை வளமாக்க முடியும். நாடும் முன்னேறும்” இப்படி வந்திருந்தோரில் அநேகர் கூறிக்கொண்டார்கள்.

இவ்வளவுகாலமும் காதற் கடலின்கொந்தளிப்பில் சிக்கி தவித்த புதுமணத் தம்பதிகள் அன்று இரவு தென்றலின் மென்மையில் சிக்குண்டு, முழுநிலாவின் குளிர் கிரணங்களுக்கு வயப்பட்டு தங்கள் வாழ்க்கைப் படகை அமைதியான காதற்கடலில் செலுத்தத் தொடங்கினார்கள்.

முற்றும்



CONNEMARA PUBLIC LIBRARY
JUL 1955

பிரயாண அனுபவங்கள்

— டி. ஏ. மதுரம் —

என்பிரயாண அனுபவங்களைப் பற்றிச் சொல்லும்போதே ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் சொந்தப் பிரயாண அனுபவங்கள் நினைவுக்கு வராமலிருக்க முடியாது. பொதுவாக எல்லோருக்குமே பிரயாண அனுபவங்களைக் கேட்கவும், பிறருக்குச் சொல்லவும் ஆவல் உண்டாவது இயற்கையே. அதேபோல மற்றவர்களின் பிரயாண அனுபவங்களைக் கேட்டும், படித்தும், தெரிந்தவைகளைச் சொல்வதிலும் ஒரு இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

ராமர், சீதை இவர்களின் பிரயாணகாலங்களில்நடந்த நிகழ்ச்சிகள், கண்டகாட்சிகள், அடைந்த அனுபவங்கள் — இவைகள் அடங்கியதானே இராமாயணக் காவியம்? கோவலன் கண்ணகி வழிப் பிரயாணங்களையும், பின் நிகழ்ச்சிகளையும் கண்டவர்களும் கேட்டவர்களும் சொல்ல, அதிலிருந்து சிலப்பதிகாரம்என்னும் காவியம் பிறந்தது. காந்தியடிகளின் சத்தியசோதனை எனும் நூல் அவரின் வாழ்க்கைப் பிரயாண அனுபவங்களின் கனிந்த விளைவுதானே. ஆகவே பிரயாண அனுபவங்களை பிறருக்குத் தருவது புதுமையானதல்ல, இன்பமானது என்பதோடு, இன்றியமையாதது என்றும் தெரிகிறது. நான் எனது சிறுவயதுகாலம் முதல் அடைந்த பிரயாண அனுபவங்களைச் சொல்வதாக இருந்தால் அதுகாவிரி நதியை ஓரணை கொடுத்துப் பரிசலில் கடந்தது முதல் சென்ற

வருடம் இமயமலையை ஒரு செலவும் இல்லாமல் விமான வழியாக சென்றது வரையுள்ள ஒரு விரிந்த புராணமாகிவிடும். இந்தக் காலத்தில் வெளிநாட்டுப் பிரயாணம் அநேகருக்கு சர்வ சாதாரணமாகிவிட்டது. சென்ற வருடம் எனக்குத் தமிழ்நாட்டில் கலாரஸிகர்களின் சக்தியால் கிடைத்த ரஷ்யநாட்டின் அழைப்பின்மேல் சென்ற பிரயாண அனுபவங்களை நினைவுள்ளவரை விளக்க முயற்சிக்கிறேன். பிரயாண தினத்திற்கு முதல்நாள் சென்னையில் நடந்த பிரிவு உபசாரங்களை என்னால் இங்கே குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை சென்னையிலிருந்து காலை 8-00 மணிக்கு என்னையும் என்னுடன் கூட பிரயாணம் செய்தவர்களையும் தாங்கிக்கொண்டு புறப்பட்ட விமானம் இந்தியாவின் தலைநகரத்து, பிற்பகல் 5 மணிக்குப் பொறுப்புடன் சென்றிறங்கியது.

டெல்லி மக்கள், குறிப்பாகத் தமிழர்கள்காட்டிய அன்பு இருக்கிறதே, சென்னையையும்வென்றுவிட்டது. நாங்கள் போதிய அனுமதிகளைப் பெறுவதற்காக தங்கநேர்ந்த அந்தக் குறுகிய இரண்டு தினங்களுக்குள் கூட்டங்கள், வரவேற்புகள், விருந்துகள், ரேடியோ நிகழ்ச்சி என எத்தனையோ நிகழ்ந்துவிட்டன. பாஸ்போர்ட் தொல்லைகள் பிரயாணத்தைச் சென்னைப் பக்கம் திருப்பிவிடுமோ என்றுகூட எண்ணும்படி ஆகிவிட்டது. இவ்வளவுவேலைகளுக்கு இடையிலும் அண்ணல் மகாத்மாவின் புனித அடக்கத்திற்குசென்று அஞ்சலி செலுத்தத் தவறவில்லை.

கடைசியாக 19ந் தேதி 8 மணிக்கு நாங்கள் 7 பேர்கள் விமானத்தில் பிரயாணமானோம். லாகூர் வந்து அடையும்போது காலை 10 மணியாகிவிட்டது. அழகான அந்த நகரை ஒவ்வொருஇடமாகச்சென்று கண்டு மகிழ எண்ணினோம். ஆனால் அதற்கு பாகிஸ்தான் அரசாங்க சட்டதிட்டங்கள்குறுக்கேநின்று எங்கள் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது.

லாகூரிலிருந்து ரயில்மூலமாக வடக்குநோக்கிப்புறப்பட்டோம். அந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஹிந்துப்பெண்களும்கூட தன்னைத்தானே பயந்துகொண்டு பர்தா முறையில் கோஷா அணிகிறார்கள். அது தேவையற்றது என்று நானும்கூட பின்தான் தெரிந்துகொள்ள முடிந்தது. பாகிஸ்தான் எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்த டக்காவுக்கு 2 மணிக்கு வந்துசேர்ந்தோம்.

தரை மார்க்கமாகச் செல்ல வேண்டி இருந்ததால் எல்லைப்புறங்களைத் தாண்டி 250 மைல்கள் போகவேண்டி இருந்தது. நாங்கள் சென்ற மோட்டார் வாகனமோ பாதைகளின்கோரங்களை உத்தேசித்து மணிக்கு 20 மைல்களுக்கு மேல் செல்ல

முடியாத நிலையில் இருந்தது. அன்றைய பிரயாணத்தை நினைக்கும்போது இன்றகூட நடுக்க முண்டாகிறது. மேடும் பள்ள மும் குண்டும் குழியும் மலிந்து கிடக்கும் ரோடு, செங்குத்தாக சென்றுகொண்டே இருக்கும். திடீரென்று குப்புற கீழ்நோக்கிச் செல்லும்—வளைவுகளும் திருப்பங்களும் அபாயத்தின்எல்லைக்குச் சென்று திரும்பும்—இருபக்கங்களைக் கவனித்தாலோ சொல்லவேண்டியதில்லை. ஒரு பக்கம் அதல பாதாளம். மறுபுறமோ வானத்தின் விளிம்பு வரை உயர்ந்து விரிந்துகிடக்கும் ராக்ஷஸ மலைகள்—கல்லும் கரடும் நிறைந்த இந்த மலைப் பிரதேசங்களின் அகலமற்ற நெருங்கிய—செப்பனிடப்பட்டுப் பல வருடங்களான அந்த ரோடுகளின் வழியாக கார் சென்று கொண்டிருந்தது—இவ்வளவு பயங்கரமான வழியில்—கற்பாரைகளையும், செம்மணற்குன்றுகளையும்தவிர—கண்களுக்குகுளிர்ச்சியான சோலைகளையோ நீர்நிலைகளையோ காண்பதற்கில்லை. இந்தப் பயங்கரப்பாதையில் எதிரே பிரயாணிகளையோ வாகனங்களையோ காண்பது மிகமிக அரிது. சிலசமயம் கழுதைகள்மேலும், நடந்தும் சிலர் ஒன்ருக வருவார்கள். அவர்களிடம்துப்பாக்கிகள் இருந்தன—அவர்கள் செக்கச்செவேலென்ற நிறமுடன் உயரமாக உறுதியாக—ஆனல் பயங்கரமாக இருந்தார்கள். அந்தப் பிரதேசங்களில் கொலைகளும், கொள்ளைகளும் சர்வ சாதாரணமாக நடந்து வருவதை நாங்கள் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்ததால் எதிர்நோக்கி வருபவர்களிடம் எங்களுக்கு அச்சம் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

நாகரிகமேஇல்லாத நாடுகளும் அதற்குற்றஜனங்களும் நிறைந்த இந்தியாவின் எல்லை விளிம்பிலே அமைந்திருக்கும் ஆப்கனிஸ்தானத்தின் தலை நகரான காபூலை அடைந்தோம். அங்கே வசிக்கும் பட்டாணியர்கள் உறுதியாகவும், எடுப்பாகவும், நல்ல நிறமுடனும்இருக்கிருர்கள். ஆனல் அவர்கள் ஆடைகளோ அசுத்தமாகவும், பார்க்கப் பயங்கரமாகவும் இருந்தது. ரோடெல்லாம் செம்மண் புழுதி—வீடுகளும் அப்படியே. மண்ணினலே கட்டப்பட்ட வீடுகளுக்குக் கூரைகளும் அதனலே அமைக்கப்பட்டிருந்தன—தெருக்களும், வீடுகளும், சுத்தமாக வைத்துக்கொள்ளப்படவில்லை—இங்கே வறுமை மலிந்து காணப்படுகிறது—ஆனல் ருசிமிக்க மாதுளம் பழங்கள், திராக்ஷைப் பழங்கள் மிகமிக மலிவாகக் கிடைக்கின்றன.

இந்த நாட்டில் பேசப்படுவது புஷ்டு என்னும் பாஷை. எங்களில் ஒருவருக்குமே இப்பாஷை தெரியாதாகையால் எங்கள் தேவைகளை பிறரிடம் தெரிவித்துப் பூர்த்தி செய்வதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது.

கடைசியாக எங்களை அழைத்துச் செல்வதற்காக ரஷ்யாவில் இருந்து வந்த விமானத்தில் ஏறி ஒருவழியாகப் புறப்பட்டோம். வானமுகட்டைத் தொட்டுநின்ற இமயத்திற்கு மேலே பறந்து சென்றோம். பயங்கரமான புதர்களாக தென்பட்டவைகள் இப்பொழுது பார்க்கையில் பசுமை நிறைந்த சிறுசிறு சோலைகளாக தென்படலாயின. இப்பொழுது உள்ளத்திலே புதுமையான ஒரு உற்சாகம்—உடம்பிலே விசித்திரமானதோர் உணர்ச்சி—இப்படி இருந்தாலும் ஒருபக்கம் அர்த்தமில்லாத ஒரு அச்சம் பிறக்கத்தான் செய்தது.

25,000 அடிக்குமேல் சென்றதும் எங்களைப் பிராணவாயுக் கருவிகளைப் பொருத்திக்கொள்ளச் சொன்னார்கள். ஏனெனில் 25,000 அடிகளுக்குமேல் சென்றதும் நாம் சுவாசிக்கும் வாயு மண்டலத்தை விமானம் தாண்டிவிடுகிறது. இமயத்தின் மேல் ஒருமணி நேரம் பிரயாணம் செய்தபின் ரஷ்யநாட்டின் எல்லைக்கு விமானம் வந்துசேர்ந்தது.

6 மணிக்கு ரஷ்ய நாட்டைச் சேர்ந்த டஸ்கான் நகரில் விமானம் இறங்கியது. முதன் முதலாக ரஷ்ய நாட்டின் வரவேற்பைப் பெற்றோம். மழை கொட்டிக்கொண்டிருந்தும்கூட அந்த நள்ளிரவில் ஆணும் பெண்ணும் பெரும்கூட்டமாகவந்து எங்களை வரவேற்கக் கூடியிருந்தார்கள்.

பிறகு அங்கிருந்துரஷ்யாவின் தலைநகருக்கு வந்துசேர்ந்தோம். மாஸ்கோ அழகு நிறைந்த ஒரு பெரும் நகரம். அகலமான ரஸ்தா, அலங்காரமான சோலைகள், அழகிய வழிநடைகள், சௌகரியமான போக்குவரவுச் சாதனங்கள்நிறைந்த வீதிகளின் இருபக்கமும் மாடமாளிகைகள், கடைகள், தொழிற்சாலைகளுடன் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் நகரம் மாஸ்கோ. பார்க்கின்ற ஒவ்வொரு இடமும் திட்டமாகவும்சுகாதாரமும்நிரம்பியிருந்தது

பெரும்பாலும் மக்களின் நடைஉடை, பழக்கவழக்கங்கள் மேல்நாட்டாரைப் போன்றதே. யாரைப் பார்த்தாலும் ஆணும், பெண்ணும்சரி, உற்சாகமாகவும், அழகாகவும், ஆரோக்கியமாகவும் காணப்பட்டார்கள். சோர்ந்து திரிபவர்கள் காணப்படவில்லை. அவர்களுக்குத்தான் என்ன சுறுசுறுப்பு. ஓட்டல், சினிமாத் தியேட்டர், கடைவீதி, கேளிக்கைஇடங்கள் எங்குமே மாலைமுதல் இரவுவரை ஒரேகூட்டந்தான். காலையிலே வரிசைவரிசையாக மக்கள் தொழிற்சாலைகளுக்கு விரைந்து செல்வதைக் காண கவர்ச்சியாக இருக்கிறது. ஆண்களைப்போல பெண்களும் பெரும்பாலும் அலுவல்களில்ஈடுபடுகிறார்கள். பெண்களுக்குத் தொழில், ஆட்சி, வாழ்வு, கலைத்துறையாவற்றிலும் முதன்மை, உண்மை மதிப்பும்

தரப்படுகிறது. காரிலிருந்து இறங்கும்போதே பெண்களை ஆண்கள் கைலாகுகொடுத்து மரியாதையுடன் இறக்குகிறார்கள். ஆனாலும் பெண்ணும் வீதிவழியே செல்லும்போது கூட ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிணைத்துக்கொண்டே செல்லுவார்கள். பெண்கள் வேலைசெய்யும் தொழிற்சாலைகளில் அவர்களுக்கு என்று தனிப்பட்ட சௌகரியங்கள் பல செய்திருக்கிறார்கள். குழந்தைகளைக்கவனிக்க ஆயாக்கள், உணவு உறங்கத் தொட்டில் முதலியவைகளும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆட்டபாட்டங்களில் கலந்துகொள்வதிலும், விருந்துகளிலும், கொண்டாட்டங்களிலும் மேனாட்டு முறையையே பின்பற்றுகிறார்கள். ஆனால் ஆடம்பரத்தை அதிகம் காணமுடியாது. அவர்களின் குடும்ப வாழ்க்கை எளிமையும், கட்டுப்பாடுநிறைந்ததாயும் இருக்கிறது. வருங்காலத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதாக இல்லை. நாட்டின் நலங்கள் தான் தங்கள் வருங்காலச்செல்வம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

நம்நாட்டு உடைகளைக் கண்டு அவர்களுக்குப் பெரிதும் வியப்பு உண்டாகிறது. என்னிடமிருந்த சில சேலைகளை சில பெண்களுக்குப் பரிசாகத் தந்தேன். இதில் அவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சி உண்டாயிற்று. அதைச் சரியாகக் கட்டிக்கொள்ளத்தெரியாமல் அவர்கள் கோணல் மாணலாகக் கட்டிக் கொண்டு வந்தது வேடிக்கையாக இருந்தது. பின்னல் நான் அவர்களுக்கு கட்டிக்கொள்ளச் சொல்லிக் கொடுத்தேன். கட்டியும்விட்டேன். பெண்கள் நகைகள் அணிந்திருக்கவில்லை. அவர்கள் நல்ல செல்வ நிலையை அடைந்திருந்தும் நகைகளின்மேல் ஆசை வைக்காதது ஆச்சரியமே. தங்கமும் வைரமும் அந்த நாட்டில் மதிப்பு இழந்திருந்ததைக் கண்டேன். தங்கத்திலான ஸ்டாலின் மெடலை சிலர் அணிந்திருந்தார்கள். ஸ்டாலின் மெடலை அணிந்திருப்பவர்களுக்கு தனிப்பட்ட மரியாதையும், மதிப்பும் தருகிறார்கள். ரஷ்யநாட்டில் ஸ்டாலின் மெடல் பெறுவதென்பது பெரும் பாக்கியமாகும். எந்தத் துறையிலாவது அருஞ்செயல் புரிந்தவர்களுக்குத்தான் ஸ்டாலின் மெடல் தந்து பெருமைப்படுத்துகிறார்கள். ரஷ்யப் பெண்களில் பலர் இப்பரிசைப் பெற்றுப் பெண்ணுலகுக்கே பெருமைதேடித் தந்திருக்கிறார்கள். ரஷ்யப் பெண்கள் அமைச்சர் பதவியிலிருந்து சாதாரணபோலீஸ்வேலை வரை திறம்பட வகிக்கிறார்கள். இன்னும் பெண்கள் கலைஞர்களாகவும், நடிகர்களாகவும் இருப்பதன்றி திறமைமிக்க பிலிம் டைரக்டர்களாகவும் இருக்கிறார்கள். டைரக்ஷனுக்காக ஸ்டாலின் பரிசும் பெற்று இருக்கிறார்கள். இன்று உலகம் புகழும் பெர்லின் வீழ்ச்சி எனும் படம்எடுத்து 3 ஸ்டாலின்பரிசுகளை ஒரே சமயத்தில் அடைந்தவரும் ஒரு பெண்மணியே.

சினிமா தியேட்டர்கள் பலஇருக்கின்றன. ஒவ்வொன்றும் மூன்று நான்குமாடிகளை உடையது. அவைகளில் சமஉஷ்ண கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சர்க்கஸ் அரங்கள், விளையாட்டு அரங்கள், நாடக அரங்கங்கள் தற்கால வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. நகர பிரயாண வசதிகளில் மின்சார ரயிலைத்தான் அதிகம் குறிப்பிட

வேண்டும். மின்சார வண்டிகள் மாஸ்கோ நகரைச் சுற்றி பூமியின் அடி வழியாகவே ஓடுகின்றன. ரயிலில் இருப்பிடவசதிகள், அழகு, சுத்தம், சிறப்பாக—ரயில்வே நிலையங்களும், ரயில்வண்டிகளும் இன்றுதான் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றனவோ என்று எண்ணும்படி அவ்வளவு சுத்தமாகவும், அழகாகவும், பளபளவென்றும் இருக்கின்றன. பெருந்திரளான மக்கள் பிரயாணம் செய்தாலும் ஒழுக்க முறையிலோ, நேர்மையிலோ குறை தோன்றாவண்ணம் நடந்துகொள்கிறார்கள். வண்டியில் டிக்கெட் பரிசோதிப்பவர்களோ, ஸ்டேஷனில் டிக்கெட் பெறுபவர்களோ இல்லாமல் இருந்தும் ஒவ்வொருவரும் டிக்கெட்டுடனே பிரயாணம்செய்கிறார்கள். ரயில் நிலையங்களிலிருந்து வெளியே வர படிக்கட்டுகளில் ஏறி இறங்கும்சிரமமின்றி படிக்கட்டுகளை மேலேயும் கீழேயும் போகும்வண்ணம்வசதிசெய்யப்பட்டிருக்கின்றன

இயற்கையும்விஞ்ஞானமும் அவர்களின் விடாமுயற்சியின்கீழ் மண்டியிட்டுக் கிடக்கிறது. வடக்குநோக்கிச்சென்றுகொண்டிருந்த—வருடத்தில் 6 மாதம் பனியாக உறைந்து பயன்தராமலிருந்த வால்காநதியின் போக்கை கிழக்கு திசையாக ஓடச் செய்துவிட்டது அவர்களின் சக்தி. இறுதியாகஒன்று, இப்புதியஉலகை ஆக்கிய லெனின் மகானின் உடலை சுமார் 30 வருடங்களுக்கு மேலாகியும்கூட இன்றும்அனைவரும்காணும் விதம் விஞ்ஞான முறையில் மருந்திட்டுக் காப்பாற்றி வருகிறார்கள். அருகில் சென்று நன்கு பார்க்கும் வண்ணம் அழகாக நிர்மாணிக்கப் பட்டுள்ள பளிங்கு மாளிகையில் கண்ணாடி அறையில் வைத்து பிரகாசமான வெளிச்சமும் உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். நாங்கள் காணச்சென்றஅன்றுகூட நீளமான கியூவரிசை காத்துநின்றது. லெனினின் வாழ்க்கை, போராட்டம், சம்பவம் முதலியவற்றைப் படங்களாகவும், மாதிரிஉருவங்களாகவும்செய்து, விளக்கங்களும் எழுதி, காட்சிசாலைகளாக அமைத்திருக்கிறார்கள். பார்வையாளர்களுக்கு விளக்கித்தர திறமையான ஆட்களையும் வைத்திருக்கிறார்கள். என் பிரயாணத்தின் போது ரஷ்யாவில் காண முடியாதனவும் இருந்தன. அவை அசுத்தமான இடம், பாழடைந்த குடிசைகள், குச்சுக்கள், சோம்பியிருப்பவர்கள், பிச்சைக்காரர்கள், திருடர்கள் இவைகள்தான். நம்நாட்டில் இருப்பதுபோன்ற சிற்பங்களும், கோவில்களையும் அங்கே காணமுடியவில்லை. துறவிகளையும் அங்கே பார்க்கமுடியாது. என் பிரயாண அனுபவங்கள் பிறருக்குப் பலன் தருமானால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

[சென்னை வானொலி நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது.]

ரவியும் ராணியும்

[ஆ. கந்தசாமி பீ. ஏ.]

("ஞானி" என்ற தெலுங்கு நாவலின் காதல் தத்துவம்)

நரைபடிந்த நெடுவயதில் ஒரு முறை நானும் பிரம்மச்சாரி ரவியும் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது நடந்த சம்பாஷணை கீழ்வருமாறு:—

"ராணீ, நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை"

"நானா? என்று என் காதலைத் தட்டிக்கழித்து, என் கண் முன் வராமல் விலகினீரோ, அன்றே உம்மை நன்கு புரிந்து கொண்டேன். இன்றுவரை நான் தப்பர்த்தம் புரிந்ததாக சந்தேகமே கிடையாது. இன்று நீர் என்னை ஆத்மபந்து என்று கூட அழைத்துக்கொள்ளுகிறீர். ஆனால் உமக்கு நான் யார்? நீர் விவாகமாவது செய்திருந்தால் உம் மனைவி உமக்குச் சேவை செய்வாள். அப்பாக்கியம்கூட எனக்குக் கிடைக்கவில்லை..."

நடுவிலேயே ரவி வெட்டினார்: "விவாகமாகிய மனைவியைவிட பிரியமானவர் உலகில் இரார் என்ற நினைப்பா உனக்கு?" கொஞ்சநேரம் நிறுத்திப் பிறகு, "நீர் யார் என்று கேட்டாய். அதற்கு பதில் சொல்ல இதுவே தருணம்" என்றார்.

"அந்தசமயமெல்லாம் தீர்ந்து போனபின், இன்று பெரும் வர்ணனையில் நீர் இறங்கவேண்டாம்"

"ராணீ, உனக்கு பொறுமை போதாது. தீர ஆராயாவிட்டால் விஷயங்களின் ஆழம் வெளிப்படாது..."

ரவி என்னசொல்லப் போகிறாரென்று ஊகித்துக்கொண்டேன். என்றிருந்தோமறைத்த பிரேமையை...ஆனால் அதுஇன்று எனக்கு அளிக்கக்கூடிய சந்தோஷம் இல்லையே! இருந்தாலும் என்னை வாழ்வெல்லாம்காதலித்த ஒருவர் இருக்கிறாரென்று கர்வம்கொண்டேன். கரைக்கடங்கிப் பாயும் ஆற்றுநீர்போல அவர் வரம்பிலேயே அடங்கி நெகிழ்ந்த அப்பிரேமை இன்று பொங்கிவழியும்போலிருந்தது. அமுங்கிக் கிடந்த அக்கினிக் குழம்பு எரிமலை வாயைப் பொத்துக்கொண்டு கிழம்பும் காட்சியைக் கண்டுணரக் குதூகலம் கொண்டேன்.

"நாம் வாழ்க்கையில் அபாயம் நிறைந்த இளயௌவனத்திலிருந்து தப்பி முந்து வந்துவிட்டோம். இளமை சேஷ்டைகளுக்கு இனி இடமில்லை. பிரேமையோ வாஞ்சையோ தீவிரரூபம் தரித்து நமமானவத்தை அளிக்கக்கூடிய பய

யில்லை. எனவே மனதைவிரித்து இப்பொழுது ஆத்மார்ப்பணம் செய்வதில் அபாயம் இல்லை'' என்றார் ரவி.

"எனக்கு விளங்கவில்லையே''

"கேள், ராணி. இளமையில் சிறு அவகாசம் கிடைத்தாலும் ஒருவரையொருவர் அனுபவித்திருப்போம்''

"ஆம்'' என்று வெட்கமின்றி தலையாட்டினேன். பின், "உலக இயல்பொத்த அதில் கவலைப்பட வேண்டியதென்ன இருக்கிறது?'' என்றேன்.

"பிரேமை என்று சொல்லிக் கொண்டு மிருக இச்சைகளுக்கு உட்பட்டிருப்போம். பின் பிறர் பிரேமைக்கும் நம்பிரேமைக்கும் பேதம் இராது. நமதும் சாதாரண பிரேமையாகவே சாய்ந்திருக்கும்''

"பிறருக்கும் நமக்கும் என்ன பேதம்? பிறரைப்போல நாமும் மூக்காலே சுவாசித்து, காலால் நடந்து, ஒரே காற்று, வெயில், நீரில் வாழ்கிறோம். பின் நம் பிரேமை ஏன் வேறுபடவேண்டும்?''

"ராணீ, நீசொல்வது கொஞ்ச தூரம் நிஜமே...பிறர் பிரேமை நாளடைவில் க்ஷீணிக்கிறதே''

"வாழ்க்கைக்கே க்ஷீணம்இருக்கும்போது...''

"குறைந்தது அவ் வாழ்க்கை அளவிற்காவது பிரேமைநீடிக்காவிட்டால், அதுஎன்னபிரேமை?''

"அப்படியென்றால், வாழ்வெல்லாம் என்னைக் காதலித்தீரென்கிறீர்'' என்று சிரித்தேவிட்டேன்.

"அதில் என்ன சந்தேகம்?'' என்ற நிம்மதியான பதில் கிடைத்தது.

"பின் இந்த பிரேமையை இன்றுவரை ஏன் ஒளித்துவைத்தீர்? வெட்கத்தாலா, பயத்தாலா?'' என்று அம்புவிட்டேன்.

"அப்படியொன்றும் இல்லை, ராணீ. என்பிரேமையை அன்று வெளிப்படுத்தியிருந்தால், உன் உள்ளக் கனவு சிந்தித்த இன்பத்தில் நம் குல வித்தியாசத்தையும் பொருட்படுத்தாது தாய் தந்தையரைவிட்டு என்னுடன் வந்திருப்பாய். சமூகக் கட்டுப்பாடுகளுக்கு பயந்து நாவல் நாயகர்களைப்போல எங்கோ ஓடி, முடிவில் வாழ்க்கையைப் பாழ்படுத்தி பச்சாதாபப்பட்டிருப்போம்''

கேலிச் சிரிப்புடன் "ஆணாகிய நீரே...என்னைக் காப்பாற்ற கதியின்றி தூரத்தியிருப்பீர்''

"ராணீ, என்னைவிடு; உன் குழந்தை கதி என்ன ஆகியிருக்கும்? இந்த அசையா உலகத்தில் நம் பிரேமை அசைவுகள் தெளிவுபடா. ஆணாய்ப் பிறந்த பயனால் எனக்குள்ள உரிமைகள் என்னைக் காப்பாற்றக்கூடும். ஆனால் பெண்ணான உன்நிலைமை எதாகும்?''

அக்குறிப்பில் கிடந்த ஆழத்தை நோக்க என் கண்கள் நீர் துளிர்த்தன. சொன்னேன்: "அன்றே இத்தனைவிளக்கி எனக்குக் கூறியிருக்கலாமே"

"ராணீ, சொன்னால்மாத்திரம் சும்மாயிருப்பாயா, என்ன? இளமை வெறியில் கண்தடுமாட்டம் இருந்திருக்கத்தான் செய்யும். இன்றென்னமோ இளமை உத்ரேகம் மங்கி, தளர்ந்த உடல் வலுவால் அபாயம் தாண்டிவிட்டோம். ஒரே கட்டிலில் நாம் படுத்தாலும் மூன்று வயதுக் குழந்தையைப்போல என்னை நீ தாலாட்டலாம்"

கொஞ்சம் விளங்கியதுபோல் தென்பட்டது. "கோபிக்காவிட்டால் சொல்லுங்கள். இம் மிருக இச்சைகளை திருப்தி செய்யவாவது ஒரு பெண் அவசியமாகத் தோன்றவில்லையா?"

தெளிந்த முகத்தில் திடீர்ச் சிரிப்பு தோன்ற சொன்னார்—"இச்சைகளைக் கிளரும் சூழ்நிலை பெருகிய இவ்வுலகில், கட்டுப்பாடு சாதிப்பது கஷ்டந்தான். இக்கட்டுப்பாட்டை என் பிரேமைக்குப் பாத்திரமான ஒருத்தியிடமாவது கடைசிவரை காட்டிக்காட்டுவது என்ற பிடிவாதத்துடன்தான் இன்றுவரை நான் வாழ்ந்தது. என் சரீர இச்சைகளுக்கு உன்போன்ற தேவியை உட்படுத்த மனமில்லை. தவறி அவ்வாறு நடந்திருந்தால், நீயும் சாதாரணப் பெண்ணாகவே என் கருத்தில் விழுந்திருப்பாய். பின் உன்விஷயத்தில் பிரேமை என்ற சாதாரணப் பெண்ணாகவே என் வார்த்தைக்கே இடம் அற்றிருக்கும்"

ஒருவகைத்திடுக்குடன்சொன்னேன்—"என்னைப்பற்றி சொல்லவில்லை. பிற அழகிகள் இல்லையா?"

"ராணீ, ஏன் சுற்றிச் சுற்றிப் பேசுகிறாய்? உன்னை மிஞ்சிய அழகிகள் உலகில் நடமாடலாம். ஆனால் அவர்களைக் காதலிக்கும் சக்தி எனக்கில்லை. நான் காதலித்திருந்தாலும், அவர்கள்மறுத்திருக்கலாம் காதலித்துக் கூடி அனுபவிப்பது யாரும் செய்யக்கூடியது. ஆனால் காதலித்துப் பூஜித்து வாழ்க்கையெல்லாம் இதயராணியாகக் நாட்டிக்கொள்வது மிகக் கஷ்டம். இக்கொள்கையில் வெற்றிகொளவேனென்று முதலில் நம்பவில்லை. ஆனால்

என் வெற்றியில் இன்று தோய்ந்து கிடக்கிறேன். நம் காதல் களங்கமற்ற 'காத'லாகவேஇருந்துவிட்டது. அது ஓணன்போல் நேரத்திற்கொரு நிறம் மாற்றவில்லை. நாமும் கால் வழுகவில்லை. அன்றிரவு நீ என் அறைக்குவந்தாயே அன்று என் கட்டுப்பாட்டுக்கு கடியசோதனை நேர்ந்தது''

''எனக்கு மாத்திரம் அன்று ஆனந்தம் நிறைந்ததென்ற நினைப்பா?'' என்றேன்.

''இல்லை. என்னைவிட உனக்கு உபாதை, கவலை அதிகம் எனத் தெரியும். விஷயம்தெரிந்து நான் தப்பவேண்டும்: உன் அறியாமையில் உன்னைக் காப்பாற்றவேண்டும். குழந்தையை மறப்பிப்பது போல் உன்னை மறப்பிப்பதும், பெரியவன்போல் கால்தடுக்காமல் என்னைக் காப்பாற்றிக்கொள்வதும் என் பொறுப்பு. அதனால் தான் உன் கண்படாமல் திரிந்து கொண்டிருந்தது, ராணீ''

''பிரேமைக்கு அடங்கக்கூடாதென்று திரிந்தீர்''

''பிரேமைக்கு மாத்திரமல்லாமல் அதனோடு வரும் உத்ரேகத்திற்கும் அடங்கக்கூடாது. பிரேமை விளைவால் உடல்சுகம் அனுபவிப்பது கடைசிப்படி, முடிவுக் கட்டம். இஷ்டப்பட்ட ஒருவன் புணர்கிறான்என்ற ஓரே திருப்தி தான். அந்த ஒரு க்ஷண பூரிப்புக்குப் பின் மிஞ்சுவது ஒன்றுமில்லை: வெறும் வெட்டப்பரப்பு தான்''

''இருந்தாலும், உலகில்இவை இல்லாவிட்டால் சப்புத் தட்டாதா?'' என்று குறுக்கிட்டேன்.

''அது நமது தப்பெண்ணம். மனிதன் எதையும் அளவுமீறி அனுபவிக்க இயலாதவன்; எந்த புதிய வஸ்துவையும் இஷ்டப்பட்ட போஜனத்தையும் வேண்டாம் என்று தள்ளும் நாள் கட்டாயம் வருகிறது. அனுபவிப்பதைவிட அதன் நினைப்பே அதிகம் இன்பம் தருகிறது! நமது பிரேமை எவ்வளவு நாளானாலும் புதுமைகலையாது'' என்ற போது, நான் பெரும் ஆலோசனையில் மூழ்கியிருந்தேன். அவர் எழுப்பிய இந்த உயர்வி லிருந்து பார்க்க என் கண்கள் சுழன்றன.

''நம் பிரேமையை மறைக்க இந்த உயரம் கற்பித்தீர்'' என்றேன் சந்தேகத்துடன்.

''ஆம், நம் பிரேமை மூடி வைத்த ரகஸ்யம். என்றும் அதை இப்படிப் புத்தம் புதிதாகவே காப்பாற்றமுடியும்; ஸெக்ஸ் அனுபவம்இல்லாதவரை. புணர்வுஏற்பட்ட நிமிடமே பிரிவு தலைகாட்டும். பிரிவற்ற புணர்வில் ருசியும் இல்லை...ஊம். நான் நிர்மானித்த கட்டடத்திற்கு அடி நீயே. அதற்கு மோசம்வந்தால் கட்டடமே பாழ். அதை சகிக்காமல்தான். உன்னைச்சுற்றிநான் எழுப்பிய இக்கொள்கை''

"அனுபவிக்கவில்லை என்ற ஏமாற்றம் மிஞ்சியது மிஞ்சியது தான்!"

"அது உன்கற்பனை. ஒருவர் ஒருவர் ஞாபகமே அனுபவம்"

"அப்படியானால் நீர் இதெல்லாம் இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியமில்லையே. மறைத்தே ரகசியமாக வைத்திருக்கலாமே"

"ராணீ, அப்படித்தான்நினைத்தேன். ஆனால் நீ அதைப்புரிந்த பாவனை இல்லை. நான் யாருக்காக வாழ்க்கையை தத்தம் செய்தேனோ, எந்த தேவிக்காக சஞ்சலமற்றபிரேமைநாட்டினேனோ, அவளுக்கே அப்பிரேமைதெரியாதிருப்பது அநியாயம். அன்று நீ என்னைத் தப்பர்த்தம் செய்து கொண்டாய். நீ சீக்கிரம் என்னைப் புரிந்துகொள்வாய் என்ற என் நம்பிக்கைக்கு நீ ஆதாரம் கிஞ்சித்தும் காட்டவில்லை. என் மரணத்தோடு என்பிரேமை ரகசியமும் மரணமடையும். அப்பொழுது உன் மனதில் எனக்கு மிஞ்சுவது உன் பகைமைதான்"

"ஆனால் இதைத் தெரிந்து கொண்டபின் உபாதை அல்லவா பெருகுகிறது"

"ராணீ, ஒருவன் வாழ்வெல்லாம் உன்னை விரும்பி பூஜித்தானே ஒழிய சரீரசுகம் தீண்டக் கூட நினைக்கவில்லை என்ற நினைப்பே உனக்கு ஆனந்த சுரபி. நான் உன்னை என்றும் மானவப் பெண்ணாககருதவில்லை. அல்லது என்னை உன் கணவனாக வைத்து நினைக்கவுமில்லை. உன் கணவன் உன்னை அனுபவித்திருக்கலாம். ஆனால் உன்னில் உள்ள 'ராணி'யைப் புரிந்திருக்க மாட்டான். நான் உன்னை 'ராணி'யாக மாத்திரமன்றி என் கற்பனைக்கிணங்க பெரும் உன்னதசிகரத்திலிருத்தி இன்புற்றேன். அந்தக் கற்பனை இன்னும் கலங்கவில்லை. அனுபவித்துக் காணா ஆனந்தத்தை தூரத்திலிருந்தே பெற்றேன்"

ரவியின் பேச்சுக்கள் சொக்கூட்டின. சொன்னேன்—"வாழ்க்கையைத் தாரை விட்டு இந்தச் சாதனை கிடைத்தது. இதைவிடக் குறைந்த சிரமத்தில் அதிக சுகம் பெற நீர் முயலவில்லை. நீர் அவ்வாறு முயன்று என்னை விவாகமாடியிருந்தால், இருவரும் சுவர்க்கபோகம் பெற்றிருப்போம். ஆனால் உம் வேதாந்தம் தடைவந்தது"

ஒருவகைச்சிரிப்புடன் சொன்னார்—"எல்லாம் கேட்டும் விளங்கவில்லையா? நம் விவாகம் நடந்திருந்தால் நம் அன்பை நம் குழந்தையும் பங்குபோட்டிருக்கும். முடிவில் நம் பிரேமை நசித்திருக்கும்"

மறித்து, "ஆனால் உம்வேதாந்தத்தில் இரண்டு வாழ்வுகள் நசித்துவிட்டவே" என்றேன்.

"இருக்கலாம்; நான் என் வாழ்வோடு இன்னொரு வாழ்

வைக்கொடுத்திருக்கலாம். ஆனால் எனக்களித்த ஆனந்தத்திற்காக அக்கொள்கையைநேசிக்கிறேன்''

மயக்கம் நிறைந்த மௌனம் என்மீது படர்ந்தது. நினைப்புகள் ஒன்றின்மேல் ஒன்று புரண்டன. ரவியைப் பார்த்து உத்ரேகம் கிளரும் உடல்நிலை இல்லை. அவரது கொள்கையைப் புரிந்துணர முயன்றேன். பெண் சுதந்தரமற்றவள். தனிநிலை அற்றவள். நான் எத்தனையோமுறை கால் வழுக்கியோ, நினைவு கெட்டோ அவர்முன் விழுந்தேன். விழுந்த என்னைப் பற்றிக்கொண்டு அவர் கால் வழுக்கியிருந்தாலும் பாதகமில்லை என்று தோன்றியது. ஆனால் அவர் பிடிவாதம் மறுதலைப்பட்டது. எங்கோ உயர்ந்துகிடக்கும்சிகரத்தில் ஏறியது. அங்கிருந்து நோக்கினால், தென்படும் சௌந்தர்யமும் புதுமையும் அனுபவிக்க கொடுத்து வைத்தது. அப்பொழுது எனக்கு ரவி என்னையே காதலித்து வாழ்வெல்லாம் பூஜித்தார் என்ற நினைப்பு எனக்கு புது உத்சாகமும் உவகையும் ஊட்டியது.

என் நினைப்புகள் ஊடே ரவியின் சொற்கள் நீந்திக் கேட்டன —''கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்கப்படுத்திக்கொள் என் கொள்கையை'' என்று.

★

எக்காலத்தும் மாறுதலை

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!



சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.
Tel:- "SIMCO"

இது நிஜமா?

[வாகன்]

கடமை

ஆலம் விதை சிறியது; விருக்ஷம் வானளாவ வளர்ந்து பிறருக்கு குளுமை தருகிறது. காதலைக்காட்டிலும் கடமை பெரிது—எரிச்சல் தரக்கூடிய காமமாக மாறவிடக்கூடாது.

—ஒரு மந்தைக்காரன்

குணம்

புண்ணைச்சொரிந்து தோண்டி குணமாகவிடாது சாவைத் தேடுகிறது குரங்கின் குணம். காம வயப்பட்டவன் தப்பித்து பண்படுகிறது சிரமம்.

—ஒரு குரங்காட்டி

அனுபவம்

காதல் மத்தாப்புப்போல—கொளுத்தியதும் ஓடிவந்து குதூகலப்படுகின்றசிறுவர்கள் அணைந்ததும் அமைதியாக வீடு திரும்புகிறார்கள். பெரியோர்களும், அனுபவசாலிகளும் காதலைவிரும்புகிறதில்லை.

—ஒரு மத்தாப்பு வியாபாரி

உரிமை

கலியாணமும் தேர்தலும் ஒன்றுபோல. திறமை, தகுதி தெரிந்துதான் வாக்களிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பீடத்தில் அமருகிறார்கள். வயதுவந்தஎல்லோருக்கும் 'ஓட்' உரிமைதான்உண்டு; பின் குறை கூறிக்கொண்டிருக்கக்கூடாது.

கலியாணத்திற்கு முன் தாம் பத்திய பொருத்தங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டியவர்கள் பெற்றோர்களும், சுற்றத்தார்களும்; பின் எதுவும் குறைவாக நினைப்பது பெருமையல்ல.

—ஒரு தேர்தல் பிரசாரகர்

குடும்ப சுகம்

இன்பமும் துன்பமும் கலந்தது குடும்பம்; கலப்பு உணவு சாலச் சிறந்தது—சுகம் தரும்.

—ஒரு டாக்டர்

காதல்

காதலும் மின்சார சக்தியும் ஒன்றுபோல—தவறினால் விபத்துத்தான்.

—ஒரு பி. ஏ.

காமம்

அடக்கப்படுகிற திடப்பொருளின் உருவடைகிறது திரவம். காதல்வழிப்போக்கில் பஸ்காதல் பீச்சுக் காதல், கல்லூரிக் காதல், சினிமாக் காதல் என்று என்னென்னமோ பெயர்களுடன் உருவாக்கப்படுகிறது. திரவத்திற்கு அமுக்கும் சக்தி கீழ் நோக்கித்தான் அதிகம். கீழ்த்தரமான எண்ணத்தால் காதல் காமமாக மாறுபாடடைகிறது.

—ஒரு பௌதீக ஆசிரியர்

குணம்

காமமும் க்ஷயமும் குறைய அமைதியான அயர்ந்த உறக்கம் தேவை. ஒய்வுக்குத் தக்க குணமாகும். உணர்ச்சியை எழுப்புகின்ற சினிமா, நாவல் போன்ற இவைகளில் நேரத்தைச் செலவிட்டு விழித்துக்கொண்டிருக்கக் கூடாது.

—டாக்டர் கும்பகர்ணன்

சகஜம்

பறவைகள்போல் சுதந்திரமாக வாழவிரும்புவது சகஜம். ஆண்கள்—வேட்டைக்காரர்கள். காதல் என்ற குறியில் அகப்பட்டு அவஸ்தைப்படக்கூடாது பெண்கள். புண் ஆறினாலும் வடு மறைகிறதில்லை.

—டாக்டர் சுதந்திராதேவி

தேவை

ஞாபகசக்தி அறிவு வளர்ச்சிக்குமாத்திரம் தேவையல்ல; கெட்டிக்காரத்தனமாக புளுகுகிறவர்களும் ஞாபக சக்தியில் தேர்ந்தவர்கள்தான். கொஞ்சம் பிசகினாலும் பின்னது அம்பலமாகிறது—அப்போது கண்டிக்கப்படுகிறது. போதனைமுறையையும், கிரகிக்கும் விதத்தையும் காட்டிலும் சூழ்புற அமைப்பைப் பொறுத்தது பண்பு. அறிந்து திருந்துவது விவேகம்.

—ஒரு காலேஜ்குமாரி

குடும்பம்

குடும்பம் என்ற குழந்தையை அழ விடாமல் சந்தோஷமாக வைத்திருக்க ஆணுக்குத் தெரியுமா?

—ஒரு பாட்டி

மகிழ்ச்சி

இம்மாதம் முதல்

தனிப் பிரதி அணா 4

ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 3

இரு கடிதங்கள்

[எம். எஸ். நாச்சியப்பன்]

நான் ராணுவத்தில் சேர்ந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதான் என்நண்பன் மூர்த்தியின் தபாலைப் பார்க்கின்றேன். அதற்கு முன்பு எனக்கு யாரும் தபால்எழுதியதே இல்லை. என் நண்பன் மூர்த்திதான் எனக்கு இக் கடிதம் எழுதியிருக்கிறான். கடிதத்தை வாசித்த என்உள்ளம் வேதனையால்துடித்தது. எனக்கு மட்டுமல்ல...இந்தக் கடிதத்தை வாசித்த உங்களுக்கும் இதயம் வேதனைப்படாமல் இருக்கமுடியாது.

மூர்த்தி...64,
சென்ட்ரல் ஜெயில்,
வேலூர்.

அன்புமிக்க நண்பா,

நலம்...நீ இக்கடிதத்தை எதிர் பார்த்திருக்க மாட்டாய். நான் உன்னை மலேயாவில் விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள் இருக்குமென நம்புகிறேன். மலேயா உனக்கு நினைவிருக்கலாம். நண்பா, எண்ணற்ற ஏழைத்தமிழ் மக்களின் கல்லறையாகக் காட்சியளிக்கும் நாடுதான் மலேயா. நம் தாயகத்தில் — வளமைமிக்க நாட்டில் — பிறந்த தமிழ் மகன் வாழ வகையில்லாவிட்டால் வா ...வா என்று வருந்தியழைக்கும் நாடுதானப்பா மலேயா.

மலேயாவில் வாழ்ந்து வந்த ஒவ்வொருவருக்கும் தன் இதய பீடத்தில் இருப்பிடம் கொண்ட நாள்......உனக்கும் நினைவிருக்கலாம். ஆம் அந்த நாள் தான் 1941 டிசம்பர் மாதம் 8ம் தேதி இரவு 11 மணி......அன்று வா ...வா...என்று வருந்தியழைத்த மலேயாவில் 'ஓடு...ஓடு இல்லையேல் மாற்றான்மண்ணிலே மடிய எண்ணமா?' என்றது ராக்ஷச வெறிபிடித்த ஜப்பானின் குண்டு வீச்சு.

நண்பா, எனக்கு அன்று நன்றாக நினைவிருக்கிறது. அப்பொழுது எனக்கு வயது 10தான். அன்று நடந்த அந்தச் சம்பவத்தை நினைத்தாலும் இன்னும் திகிலாகத்தானிருக்கிறது. நானும் ஓர் தமிழன்தான். இருந்தாலும் என் தந்தை மலேயாவில் ஓர் ரப்பர்தோட்டமுதலாளி. குண்டு வீச்சு காரணமாக நான் என் தந்தையைவிட்டுப் பிரிந்து 10 ஆண்டுகள் ஆகின்றது. மலேயாவை விட்டு பலதுன்பங்கள்பட்டு வந்தபோது இடையிலே வழித்துணைக்கு வந்தவள் இன்று என் இதய பீடத்தில் ராணியாக அமர்ந்துவிட்டாள்.

ஒரு காலத்தில் செல்வத்தின் சீமானாக வளர்ந்துவந்த நான் இன்று ஒரு ஏழையில் தொழிலாளி. என் ஊதியத்தைக் கொண்டு குடும்பநிர்வாகம்நடக்க இயலாது என்றெண்ணிய என் இந்துவும் ஒரு தனவந்தர் வீட்டில் வேலைக்கமர்ந்தாள். நண்பா இந்து யாரென்று எண்ணுகிருயா...? சாக்ஷாத் என் மனைவி தான். எங்களுக்கு விவாகமாகி இன்ருேடு $1\frac{1}{2}$ ஆண்டு பூர்த்தியாகிவிட்டது.

எங்கள் இருவர் உழைப்பினுல் பெற்ற ஊதியத்தைக்கொண்டு எங்கள் குடும்பப் படகு உல்லாசமாகச் சென்றது. நான் வேலையிலிருந்து அயர்வுற்று வீட்டிற்கு வரும்போதெல்லாம் புன்னகை பூத்த முகத்தால் இன்மொழி பேசி என்னை ஆனந்தக் கடலில் ஆழ்த்துவாள். நாங்கள் இருவரும் இப்படி இன்பமாகவாழ்ந்து வந்தகாலத்தில் எங்கள்வாழ்க்கையிலும் புயல்வீசத்தொடங்கியது. ஆம்...புயல்தான்...என் வாழ்க்கையை என்றும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திய புயல்தான்......

ஏழையாயிருந்தாலும் நாங்கள் மானத்துடன்தான் வாழ்ந்துவந்தோம. ஆனுல் காமவெறிபிடித்த பணக்காரவர்க்கம் எங்களை வாழவொட்டாமல் தடுத்தது மாடிமேல் மாடிகட்டி, பஞ்சணை மஞ்சத்தில் நித்தம் ஒரு பாவையுடன் போதைவெறியில் படுத்துப் புரளும் பணக்கார வர்க்கத்திற்குப் பழியானுள்.........நண்பா! என்ன யோசிக்கிருய்?......ஆம் என் மனைவி இந்து பலாத்காரமாய்த் தான் வேலைபார்த்துவந்த பணக்காரனுல் கற்பழிக்கப்பட்டாள்......

ஊருக்குஉழைக்கும் உத்தமன் நான்தான் என்று ஊரும் வாகனத்தில் பவனிவரும் பணக்காரவர்க்கத்தின்மேல் நான் சாட்டிய குற்றச்சாட்டு இருட்டறைக்குள் ஓடி ஒழிந்துகொண்டது. ஊராரின் பழிச் சொல்லுக்கு அஞ்சிய என் இந்து மரணதேவதையைத் தாவி முத்தமிட்டுவிட்டாள்...... எனக்காக என் இந்து இந்த உலகில் விட்டுச்சென்றது இத்துடன்அனுப்பியிருக்கும் அவள் கடிதம்தான். அதையும் படித்துப்பார்......

* * * *

அன்பரே,

வணக்கம். வகைவகையாக சூழ்ச்சிகள் செய்வோர்தான் வையத்து வாழ்வில் வலம் வருகின்றனர். சூழ்நிலை அவர்களுக்கு அனுசரணையாக அமைந்துவிட்டதுபோலும். அன்பரே வருத்தம் வேண்டாம். என் அழகே எனக்கு எமனுக மாறிவிட்டது. அன்று நீங்கள் கடற்கரையில் வைத்து "இந்து! தென்றலில் மிதந்துவரும் மலர்களின் மணம்கூட உன் கூந்தலின் நறுமணத்திற்கீடில்லை...மல்லிகை மொட்டுக்கூட உன் பொட்டிட்ட மேனிக்கு இணையில்லை. தள்ளி

ஓடும் புள்ளிமானின் அழகுகூட அள்ளிப் பருகவேண்டிய உன் அதிரத்திற்கு ஈடில்லை'' என்றெல்லாம் வர்ணித்தீர்களே. அவைதான் இப்பொழுது நான் வேலை பார்த்த வீட்டு முதலாளியைப் பித்தனுக்கிவிட்டதாம்!

நான் கோபப்பட்டேன்...... அதற்கு அவர் 'உன் முகத்திலே கோபம் விளையாடுவது வான மண்டலத்தில் சந்திரனில் கலங்கம் ஏற்பட்டதுபோல் இருக்கிறது' என்றார். 'காமப்பேச்சை நிறுத்தமாட்டீரா' என்றேன். 'நீல மலையினின்றுபாயும் அருவியை இடையில் தடுத்து நிறுத்த முடியுமா' என்றார். நான் ஓடினேன்...அவர் கரங்களை நீட்டி எட்டிப் பிடித்தார். எனக்குக் கற்புப்பிச்சை கொடுங்கள்என்று காலில் விழுந்து கெஞ்சினேன். காமவெறி கொண்ட கல்நெஞ்சனின்மனம் கொஞ்சம்கூட இளகவில்லை. நான் மிஞ்சினேன்... அவர் அஞ்சவில்லை. நான் எட்டி நில் என்றேன்...'கட்டிக் கரும்பே'யென கிட்டேவந்தார். நான் மீண்டும் ஓடினேன்...தாவிப் பாய்ந்தார், எலிமீதுபாயும் பூனை போல என்மீது. நான் மயக்கமுற்றேன்.

அன்பரே, மீண்டும் நான் கண்விழித்துப் பார்த்தபொழுது பணக்காரவர்க்கத்தின் பஞ்சணை மஞ்சத்தில் கசக்கி எறியப்பட்ட மலராக அலங்கோலமாகக் கிடந்தேன்' வண்டு பறந்துவிட்டது! 'வண்டு பறந்துவிட்டாலும் நான் இருக்கிறேன்' என்று ஆறுதல் கூறுவதுபோல கூறியது மேஜையின்மீதிருந்த 100 ரூ. நோட்டு. ஆம் அன்பரே என் கற்பு 100 ரூபாய்க்கு விலைபோய்விட்டது. நான் மானமிழந்தவள் இந்த வஞ்சக உலகத்தில் வாழவிரும்பவில்லை...உங்களுக்கு என் இதய ஆசி. இந்தக் கடிதம் உங்கள் கைக்குக் கிடைக்குமுன் இந்த உலகத்தைவிட்டு விடுதலைபெற்று விடுவேன். என்னைத் தேட வேண்டாம். வருகிறேன்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள, இந்து.

* * * *

நண்பா இந்தக் கடிதத்தைப் படித்து முடிந்ததும் என்மனம் என்னபாடுபட்டிருக்கும். இந்து ...இந்து என்று அலறினேன். 'இல்லை...இல்லை...' என்று எதி

றொலித்தது...அழுது புலம்பி ஆழ்ந்துசிந்தித்து ஒருமுடிவிற்கு வந்தேன். பாவ மூட்டைகளைப் பாதாள சுரங்கத்தில் அடக்கி வைக்கும் பணக்கார வர்க்கத்தை கருவறுக்கத் திட்டமிட்டேன். கள்ளமார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடித்து மாடி வீட்டில் போதைவெறியில் குலமாதரைச் சூரையாடும், மனிதத் தன்மையை மறந்து உலுத்தர்களாய் ஊரில் உலவிக்கொண்டிருக்கும் துரோகிகளைப் பழிவாங்கத் திட்டமிட்டேன். என் இந்துவை இந்த உலகை விட்டுத் துரத்திய பணக்காரனைப் பழிவாங்கத் திட்டம் தீட்டினேன். கையிலே கட்டாரியுடன் பித்தனைப்போல் சுற்றியலைந்தேன். சட்டம் என் கண்முன் சதுராடவில்லை. மக்கள் சாகரத்தில் உள்ள சட்டம் மண் குதிரைபோல் காட்சியளித்தது.

என் திட்டப்படி ஒருநாள் அந்த வஞ்சகனின் வீட்டில் நுழைந்துவிட்டேன். என் இந்துவின் உயிரை உறிஞ்சிய அந்தப் பணக்காரன் பஞ்சணையில் படுத்திருந்தான். மெதுவாக அவனண்டை நெருங்கினேன். பல்லைக் கடித்துக்கொண்டு பலம் கொண்டமட்டும் என் கட்டாரியால் அவன் நெஞ்சத்தைத் தாக்கினேன். அவன் ஐயோ என்றலறினான்...செங்குருதி தெறித்தோடியது. அதைப் பார்த்து நான் அஞ்சவில்லை. என் உள்ளத்தில் சாந்தி ஏற்பட்டது. திரும்பி விரைவாகவெளியேறும் சமயத்தில் என்னை மறந்து அப்படியே நின்றுவிட்டேன். வேறொன்றுமில்லை நண்பா......என் எதிரில் காட்சியளித்த அந்தப் போட்டோதான். அந்தப்போட்டோவைப் பார்த்தவுடன் எனக்கு மலேயா நினைவுதான் வந்தது. அந்தப்போட்டோ வேறு யாருமில்லை, நானும் என் தந்தையும் தான். 15 ஆண்டுகளுக்குமுன் நானும் என் தந்தையும் மலேயாவில் எடுத்த போட்டோவைப் பெரிதாக வரைந்து அதற்கு மலர்மாலை சூட்டப்பட்டிருந்தது. குற்றுயிராய்க் கிடந்த அவர், மகனே மூர்த்தி......மூர்த்தி... என்று அலறினர். அப்பொழுதுதான் என்னால் கொலை செய்யப்பட்டவர் என் தந்தை என்று உணர்ந்தேன். அப்பா என்று அலறி ஓடினேன்...மகனே என்று அவரும் உயிர் நீத்தார். அப்பா...அப்பா...என்று அலறிய என்உள்ளத்துக்கு ஆறுதல் அளித்தது போலீசாரால் அளிக்கப்பட்ட பொன்விலங்கு. விசாரணை நடந்தது. நான் வாதாடவில்லை. எனக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டது. மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். நான் இப்பொழுதுஇருப்பது வேலூர் சென்ட்ரல்ஜெயில்தான். நண்பா எனக்கு இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறது.

அன்புள்ள, மூர்த்தி.

★

பொங்காதா மகிழ்ச்சி

[தமிழ்ப்பாலன்—புதுநகர்]

உற்பத்தியைப் பெருக்க, உழைத்திடுநீ தோழா!
உண்டுபின் நல்வாழ்வு, உயரும்நம் நாடென்று
சற்புத்ரர் போன்றநம் சர்க்காரின் செல்வர்
சங்கொலித்துக் கூறுவது சரிதானே பாரும்!

எலும்பாம்நம் நாட்டுக்கு ஏர்பிடிக்கும் தோழன்,
என்னாளும் அவன்வாழ்வு எளிமை; வேறில்லை.
ஒழுகாத வீடில்லை; உழைக்கநிலம் சொந்தமில்லை;
உண்மையிலே கல்விஇல்லை; உழைப்பானே இனியும்?

ஆலையிலே தொழில்புரியும் அண்ணனையும் பாரும்!
அப்பாடு பட்டாலும் அவனறியான் பங்கு
இளைப்பார நாள்இல்லை; இலைஇன்பம் வாழ்வில்
எப்படித்தான் உழைப்பான் இனிமேலும் கூறும்?

கற்றபின் தெருவளப்போர் கணக்கில்லை நாட்டில்;
கைத்தொழில் புரிவதற்கோ கல்விமுறை இல்லை;
பெற்றவரும் மற்றவரும் பேடிஎன ஏச,
பிணம்போல வாழ்கின்றான் கற்றவனும் ஐயோ!

கூலித் தொழிலாளி குறையையுமா சொல்ல?
குறையாமல் அவன்வாழ்வில் குறைதானே எல்லாம்.
கூழில்லை குடிப்பதற்கு; குழந்தைக்கோ பாலில்லை
உழைப்பானே தொழிலாளி உயிர்நீங்கும் போது?

உழுபவனுக்குநிலம் உரிமையாக வேண்டும்!
உற்பத்தி பெருகசர்க்கார் ஒத்துழைக்க வேண்டும்!
பழுதற்ற கல்விமுறை; பங்குதரும் ஆலைவந்தால்
பஞ்சம் பறக்குமெனச் சொல்லவுமா வேண்டும்?

உடைமுதலாய் உணவுடனே உறைவிடத்தைப்பற்றி,
உழைப்பவர்கள் உள்ளாமல் அரசியலார் செய்ய,
படைபோன்ற படித்தவரோ டுழவர் தொழிலாளி
பாடுபடப் புகுந்துவிட்டால் பொங்காதா மகிழ்ச்சி?

சிறுவர் சிறுமியர் பகுதி:

"நானே ராஜா"

— மகிழ்ச்சி —

எனது அன்புமிக்க சிறுவர் சிறுமிகளே இப்பொழுது உங்களுக்கு என்னைப்பற்றிய ருசிகர விஷயங்களைக் கூறப்போகிறேன். இன்று இவ்வுலக மக்களுக்கு நான்தான் பிரதானம்—ஜீவநாடி. நான் இல்லையென்றால் மக்களுக்கு அந்தஸ்து இல்லை; அழகில்லை; ஆதரவுமில்லை. நான் உள்ள இடம்தான் சுவர்க்கம். நான் யாரிடம் நேசம் கொள்ளவில்லையோ அவர்கள் இவ்வுலகில் நடைப்பிணங்கள்தான். என்னால்தான் அரசனும், ஆண்டியும், பணக்காரனும், பராரியும் பாகுபாடுபடுகின்றனர்.

என்னால்தான் சுற்றமும், சூழ்நிலையும் உண்டாகும். என்னை யார் அதிகமாக நேசித்து ஆட்கொள்ளுகிறார்களோ அவர்களை ஜாதியோ, மதமோ, எதுவும் கட்டுப்படுத்தாது. நான் உள்ள இடத்தை பூவின் தேனை நாடி வரும் வண்டுபோல் வளையம்சுற்றிச்சுற்றித் திரிவர் மக்கள்.

வறுமை செம்மை, வாழ்வு தாழ்வு, பாசம் பகை, விருப்பு வெறுப்பு முதலிய இதுபோன்ற நன்மை தீமைகளெல்லாம் நான் உள்ள இடத்தில் ஏற்படுகிறது. நான் என்னமோ யாருக்கும் தீங்கு இழைக்க நினைப்பதில்லைதான். ஆனால் என்னைப் பேராசையால் பற்றிக்கொண்டவர்கள், என் நேசத்தை விரும்பும் மற்றவர்களுடன் மல்லுக்கு நிற்கிறார்கள். கடைசியில் என்சிநேகிதம் கிடைக்காதவர்கள், நான்தான் கொடியவன், செறுக்குடையவன் என்று தூற்றுகிறார்கள். உலக யுத்தம்நடந்தது, இனியும் நடக்கும் என்றால் அதுவும் எனக்காகத்தான். திருட்டுத்தனம் என்றால் அதுவும் என்னைக் கைப்பற்றத்தான், கொலை என்றால் அதிலும் என்காரியமாகத்தான் இருக்கும். ஆனால் இவ்வளவிற்கும் நான் குற்றவாளி அல்ல எல்லாம் என் மயக்கத்திலிருக்கும் லோபிகளால்தான் ஏற்படும்.

இவ்வளவு நேரம் நான்சொன்னதைக் கேட்டுவந்த உங்களுக்கு ஏன் நீ எல்லோரையும் ஒரே மாதிரியாக நேசிக்கலாமல்லவா? ஒருசிலரை மட்டும் அதிகம் நேசிப்பானேன்? அநேகரின் பகையைச் சம்பாதிப்பானேன் என்று கேட்கத் தோன்றும். உங்கள்கேள்வி சரியான கேள்விதான்! உங்கள் விருப்பப்படிதான் இருக்க விரும்புகிறேன். ஆனால் ஒருசில கற்றறியா மூடர்

களிடமும், அற்பர்களிடமும், ஆடம்பரக்காரர்களிடமும்சோம்பேறிச் சோதாக்களிடமும், உண்டு கொழுத்து ஊர்சுற்றித் திரியும் ஊதாரிகளிடமும், எப்படி எப்படியோ என்னை அறியாமல், நழுவி விழுந்துவிட்டேன். அதிலிருந்து இன்று மீட்சி அடையவே அவாவுடன் காத்து நிற்கிறேன். இதற்கு நீங்கள் தான் உற்ற உதவி செய்யவேண்டும். சுறுசுறுப்பான வேலையும், ஒன்றுபட்ட உள்ளமும், பாகுபாடற்ற நெஞ்சமும், முயற்சி மிக்கமுன்னேக்கும் கொண்டால் தான் என்னை மீட்க முடியும். இதை நீங்கள் மேற்கொள்வீர்களா?

அப்பொழுதுதான் நாட்டில் நிலையான, நேர்மையான, சமமான, சகோதரத்வ, சந்தோஷ வாழ்வு மக்களுக்கு ஏற்படும். ஆமாம் இவ்வளவு நேரம் என்னைப்பற்றிச் சொல்லிவந்தேனே! ஆனல் என்னை யார் என்று கூறவில்லையே! அண்டசராசரங்களையும் ஆட்டி ஒட்டி அல்லலுறச் செய்து வரும் என் பெயர் என்னதெரியுமா? ப...ண...ம்! தெரிந்துகொள்ளுங்கள்.

பணம் பந்தியிலே
குலம் குப்பையிலே

பணமென்ருல் பிணமும்
வாயைத் திறக்கும்

அருள்இல்லார்க்(கு) அவ்வுலகம்
இல்லை; பொருள்இல்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

ஈட்டி எட்டியமட்டும் பாயும்
பணம் பாதாளமுட்டும் பாயும்

பணமில்லாதவன் பிணம்

ஆகவே, முயற்சியுடன் சம்பாதித்தபணத்தை வீண் விரயம் செய்யாமல் சிக்கனமாக செலவு செய்யப் பழகுங்கள். கால் துட்டு ஆனுலும் கல்விக்காகச் செலவிடுங்கள்.

★

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறேம்.

★

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,
நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு. :: யாழ்ப்பாணம். (சிலோன்)

உங்களுக்குத் தெரியுமா?

எத்தனை கமலங்களோ இந்நாட்டில்?

ஆற்றங்கரையோரம் குழந்தை ஒன்றின் அழுகுரல்கேட்டு அத்திசைநோக்கி வந்தவர்களைக்கண்டதும் அங்கிருந்த ஒரு பெண் ஓட ஆரம்பிப்பதைப் பார்த்த ஆட்கள்துரத்திப்பிடித்து போலீசார்வசம்ஒப்படைத்தனர் அவளை

அதைஅடுத்து ஆற்றுமணலில் ஒரு அடி நீளமுள்ள குழந்தை ஒன்று புதைக்கப்பட்டிருந்தது தோண்டி எடுக்கப்பட்டது போலீசாரால். கைகளும்,கால்களும் மடக்கப்பட்டிருந்த அக்குழந்தை கழுத்தை நெரித்துக் கொன்றதால் இறந்திருக்க வேண்டுமென பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறியுள்ளனர். அந்தப் பெண்ணைச் சோதித்ததில் அன்றுதான் அவள் பிரசவித்திருக்க வேண்டுமென்று டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

அந்தப் பெண்ணின் பெயர் கமலம்; வயது 26; விதவை. மதுரையைஅடுத்த கீரைத்துரையைச் சேர்ந்தவர். சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

* * * *

மணமாகாமல் மக்கட்செல்வம்!

ஆடவர் சேர்க்கையின்றி செயற்கையில் கருத்தரிக்கும் முறைக்கு நார்வே, ஸ்வீடன் தேசங்களில் பேராதரவு இருக்கிறதாம். வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பெண்கள் இம்முறையில் குழந்தைகள் பெறுவதற்கு அங்கு வருகிறார்களாம்.

பிரிட்டனில் மனோதத்துவ நிபுணர்களும், டாக்டர்களும், மதத்தலைவர்களும் இதை எதிர்க்கின்றனராம். ஆனால் ஸ்வீடன் பார்லிமெண்டில் இம்முறைக்கு சட்டத்தினால் தடங்கல் இருப்பதைத் தவிர்க்க ஒரு மசோதா தயாரித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

* * * *

உலகில் நீண்ட மீசை!

இந்திய சர்க்கார் செக்ரடேரியட்டில் வேலையாக உள்ள 60 வயதுள்ள ரஜபுத்திர பியூன் பிரீதம்சிங் என்பவரின் மீசை 6 அடி நீளமுள்ளதாக இருக்கிறதாம். நரை ஒன்றுகூட கிடையாதாம். உலகில் வேறு யாருக்காவது இவ்வளவு நீளம் இருக்கிறதாஎன்று சவால்விடுகிறாராம்

பராசக்தி

திரைப்பட விமர்சனம் :: 'டிடெக்டிவ்.' மதுரை.

தங்களது முதல் தயாரிப்பிலேயே வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்து ஜெயக்கொடி நாட்டிவிட்டனர் நேஷனல் பிக்சர்ஸார்! ஆம் 'பராசக்தி' அவர்களுக்கு அமோகமான வெற்றியை அளித்துவிட்டாள்!!

"தங்கையின் திருமணச் செய்திகேட்டு பர்மாவிலிருந்து இந்தியா புறப்பட்டவன் எண்ணற்ற இன்னல்களில் சுழன்று, 'நடமாடும் சமாதி'யாகி குமுறும் உள்ளத்துடனும், கொதிக்கும் இரத்தத்துடனும் தங்கையை வந்து காணுகிறான்! ஆனால் விதவையாக! குழந்தை பிறந்தவுடன் கணவனை இழந்தவளாக! காவாலிகள் கைக்கிரையாக்கப் பார்க்கும் ஆதரவற்றவளாக!

தங்கையைக் காப்பாற்றுகிறான் பைத்தியக்காரன் நிலையிலிருந்து. உலகம் அவனைப் பார்த்து சிரித்தது. நீதி அவனைப் பார்த்துச் சிரித்தது" இப்படி புதிர்களிடையே நீண்டுகொண்டே போகிறது கதை......மூல கதையை செதுக்கியிருக்கிறார் திரு. பாலசுந்தரம்! அதை திரைக்கேற்றமுறையிலே குழைத்து உருவாக்கி குமுறும் வசனங்களுடன் நமக்களித்திருக்கிறார் திரு. கருணாநிதி!! ஆம்! அவர் வசனம் குமுறிக் கொந்தளிக்கும்போது நாமும் சீறுகிறோம். அவர் வசனம் கண்ணீர் வடிக்கும்போது நம்கண்களிலும் நீர் மல்குகிறது வழக்கு மன்றத்திலே வாரிவீசப்படும்வசனங்களைக்கண்டுதிகைத்துநிற்கிறோம். நாம்நிற்கவில்லை திரு. கருணாநிதி நிற்க வைத்துவிட்டார்!

நடிப்பில் சிவாஜி கணேசன் முதலிடத்தை வெகு எளிதில் தட்டிக்கொண்டு போய்விடுகிறார். அவரது பைத்தியக்காரநடிப்பின் போதும், பூசாரியிடம் பேசும் போதும், நீதிமன்றத்திலே வழக்காடும்போதும் நடிப்பின் சிகரத்திற்கும் 'ஒருபடி' மேல் போய் விடுகிறார்! படவுலகக் கதவுகள் சிவாஜி கணேசனுக்கு இனி திறந்துவைக்கப்படலாம்!

சகஸ்ரநாமமும் பழைய 'பைத்தியக்காரன்' நடிப்பை கடைசியில் எட்டிப் பிடிக்கிறார். அவர் நடிப்பு நம் கண்களில் நீரைக்கூட மல்க வைத்துவிடுகிறது. வி கே. ராமசாமி தனக்கேஉரிய பாணியில் பொரிந்துதள்ளுகிறார்.

ஜூனியர் ரஞ்சனி இதில் நன்கு நடிக்கிறார். "மற்றப் படங்களில் நான் நன்கு நடித்திராவிட்டால் அது என் குற்ற

மல்ல'' என்று சொல்லாமல் சொல்கிருர். அவரது உள்ளம் குமுறும்போது அவ்வுணர்ச்சிகளை முகத்தில் நன்குபிரதிபலித்துக் காட்டுகிருர். பண்டரிபாய் 'ஏதோ' நடிக்கிருர்......இனி பழகிக்கொள்வார்.

ஏவி.எம்.மின் ஹானரபிளான மாருதிதான் ஒளிப்பதிவு விஷயத்தைக் கவனித்திருக்கின்ருர். கோவிலில் 'பூசாரிசின்' சமயத்தில் காமிரா சுழற்சி பிரமாதம்.

ஜீவாவும் ஒலியை நன்குபதிவு செய்திருக்கிருர். இன்னும் நன்ருய் செய்திருக்கவும் அவரால் முடியும்.

ஹீராலாலின் நடனத்திறமை கமலா நடனத்தின்மூலம் நமக்கு நன்கு தெரிந்துவிடுகிறது

ஒரு பாடலுடன் மற்ருெரு பாடல் வெற்றிக்காக போட்டியிட்டுக்கொண்டு வருகிறது.

மொத்தத்தில் விமர்சனமுடிவு நான் கூறவேண்டியதில்லை. முடிவு கூறுமுன்தான் நீங்கள்தியேட்டரில்நின்றுகொண்டிருப்பீர்களே

ஞாபக சோதனைப் போட்டி 8

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 30-11-52

சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1 — — — ந்தரி
2 ப — — — தி
3 — — த — — — தி
4 — ஸ் — — ர — கி —
5 த — — — — ம்
6 ப — த — — — ன்
7 — ன் — —
8 — — ரா —
9 — — — — ங் — ம்
10 — ஸ் — — —

பெயர்...

விலாசம்...

ஊர்.................................. ஜில்லா...............................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 30-11-52க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்

ஞாபக சோதனைப் போட்டி 7 முடிவு

சரியான விடை

1	தியாகி	6	ஜம்பம்
2	தாய்நாடு	7	பூர்ணச்சந்திரன்
3	ராஜசேகரன்	8	கோதையின் காதல்
4	ராஜசூயம்	9	நவயுவன்
5	சண்பகவல்லி	10	பஞ்சாப்கேஸரி

முதற்பரிசு (1 தப்புள்ள விடை) ரூ. 3—4—0

S. தங்கசாமி, கிருஷ்ணபுரம், பசுமலை. (மதுரை ஜில்லா)

2வது பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 1—0—0 வீதம்

1 K. ஜான்ஸிதேவி, 8 பந்தடி, 2வது தெரு, மதுரை.

2 S. தங்கச்சாமி, C/o SV. K. S. S. பலசரக்கு மளிகை, விருதுநகர்

3 P. மாணிக்கவாசகம், C/o P. முத்துசாமி பிள்ளை, தம்பாப்பிள்ளை தெரு, இராஜபாளையம்

4 P. பழனிச்சாமி, சந்திரசேகர விலாஸ் வாட்ச் கம்பெனி, 81, பஜார், விருதுநகர்.

5 K. T. வேலாயுதம், S/o T. திருமலையப்ப பிள்ளை, வக்கீல் குமஸ்தா, நடுத்தெரு, கொக்கிரகுளம். (திருநெல்வேலி ஜில்லா)

3வது பரிசு (3 தப்புள்ள விடை) அணா 4 வீதம்

1 S. ராஜசேகரன், அண்ணாதுரை நியூஸ்மார்ட், இராஜபாளையம்

2 K. கோவிந்தன், செல்லனக்கௌண்டன்பட்டி. அலங்காநல்லூர் போஸ்ட், மதுரை ஜில்லா.

3 R தனிக்கோடி, 70/14, வள்ளிக்குட்டிநாடார்தெரு, விருதுநகர்

4 A. R. K. சிவம், 228, கீழவெளிவீதி, மதுரை.

5 M. கோவிந்தசாமி, பஸ் ஸ்டாண்டு எதிர்கடை, மன்னார்குடி.

6 S. மகாலிங்கம், C/o P. S. ரத்தினசாமி நாடார், எண்ணெய்க்கடை, முனிசிபல் ஆபீஸ் ரோடு, விருதுநகர்.

7 S. இஞ்ஞாசிமுத்து, 111, ஆர்.ஸி. வடக்குத்தெரு, சாத்தூர்.

(3வது பரிசுக்கு "15 நிமிடங்கள்" புத்தகம் அனுப்பப்படும்)

கார்டு கட்டுரைப் போட்டி 1 முடிவு

எப்படிப்பட்ட கல்வி வேண்டும்?

★ கல்வி, கற்றவனுக்கு பயன்படும் முறையில் இருக்க வேண்டும் இன்றைய கல்வி போன்று ஏட்டுச் சுரைக்காயாய் இராமல் தொழிற் கல்வியை மாணவர்களிடம் புகுத்தவேண்டும். கல்வி என்றால் மாணவர்கள் கற்கண்டு என்று கூறும் வகையில் மாற வேண்டும். பெண்களுக்கும் ஏட்டுக் கல்வி வேண்டியதில்லை. குழந்தைவளர்ப்புபோன்ற குடும்பக்கலையைப் பெண்களுக்குப் போதிக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் பணம்பறிக்கும் இக்கல்வி போய், ரஷ்யா போன்று ஏழைகளும் கற்றுப் பயன்படும் வகையில் கல்வி வேண்டும். உழைப்பதை உயர்வென்று மாணவர்கள் கருத, மாணவர்கள் உழைக்கும் கல்வி வேண்டும். இன்றைய 'மனப்பாடக் கல்வி' மறைந்து 'உயிர்க் கல்வி' வரவேண்டும்.

வடமொழிபோன்றபிறமொழியைக் கட்டாயமாகக் கற்கக் கூறும் கல்வி மறையவேண்டும். தாய்மொழியை நன்கு கற்கும் வாய்ப்பு கிட்டவேண்டும். மாணவனை இதைத்தான் கற்க வேண்டும்என்றுகூறும் கல்வி மறைந்து மனதிற்கிசைந்தவற்றைச் சுதந்திரத்தோடு மாணவர்கள் கற்கும் கல்வி வேண்டும். கற்க விரும்புகின்றஒவ்வொருவனுக்கும் அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும். ஓர் சில பிரிவினர்க்கு மட்டும் கல்வி கற்க அளிக்கும் சலுகை மறையவேண்டும். கல்வியின் கண்ணே சமத்துவமும், பிரிவினையும் மறைந்து எல்லோரும் ஒன்றுபடும் கல்வியே இன்றைய நிலையில் நமக்கு வேண்டும்.

எம்.பி.குருசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

* * * *

இக்கேள்வி நம் நாட்டிற்குத் தேவையானது. இன்று நம் நாட்டில் பள்ளிக்கல்வி பயனற்று இருக்கிறது. வாழ்க்கைக்கு வழி காட்டும்வகையில் அமையவில்லை மதிப்பெண் பெறும் நோக்கத்தோடு கற்கும் கல்வி, அறிவைப் புகட்டாது. எனவே இத்தகைய கல்விநீங்கி வாழ்க்கையில் பயன் பெற்று முன்னேற்றப்பாதையை அமைத்துக்கொள்ளத் தொழிற் கல்வி கற்பித்தல் அவசியம். அவ்வாறு அமைந்தால் மாணவர்களுக்கும்பயன்படும்; ஊதியமும் கிடைக்கும். பிற்கால வாழ்வு சுபீட்சமடைய சுலபமாக நம் தேவைக்கேற்றபொருளீட்டமுடியும். இன்று மாணவர் பலர் படித்து பட்டம் பெற்றும் வேலை

யின்றி அலைகின்றனர். ஆகவே புத்தகப் படிப்போடு நிற்பது கல்வியாகாது. தவிர நம் நாட்டில் இன்றைய கல்வி "கிராஸ் வேர்ட்ஸ்" போன்று அமைந்துள்ளது. எனவே இத்தகைய கல்விமுறை ஒழிந்து மக்களுக்கு பயன்படும் தொழிற்கல்வி அமைய வேண்டும். மக்கள் பிறர் உதவி பாராது பல தொழில்களில் ஈடுபடுவர். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். நாடும் முன்னேற்றமடையும். புதிய தொழில்கள் பல உருவாகும்.

தி. ஜெயராமன், உதகை.

* * * *

இக்கேள்வி எழுந்ததிலிருந்து ஒரு வெளிப்படை உண்மையும் சேர்ந்து தோன்றுகிறது. 'இப்போதுள்ள கல்விமுறை பயனற்றது'என்பதே அது. இன்றைய கல்வி ஒரு தனிப்பட்ட அம்சமாகஇருக்கிறது. அது கூடாது. கல்வியானது கற்பவரின் வாழ்க்கையை ஒட்டியதாய் இருக்க வேண்டும். அதிலும் அவரவர் விருப்பின்படி கற்க ஏதுவாகிய கல்வி வேண்டும். அப்படியாயின் அவர் அதில் அதிக நாட்டம் செலுத்தவும், அதில் வல்லுநராகவும் இயலும். கல்வி கற்கிறோம் என்ற தனி உணர்ச்சியின்றி தன் வாழ்க்கையின் ஒரு பாகத்தைக் கழிக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படும்படி செய்யும் கல்வி வேண்டும். இவ்வாறு அவரவர் தன்மைக்கும் விருப்புக்கும் ஏற்ற கல்வி அமைத்தால் அங்கே தொழிற் கல்வியே அதிகம் இடம்பெற முடியும். விபசாயமும், வியாபாரமும், விஞ்ஞானமும், கலையும், கைத்தொழிலும் கற்பவரின் மனதை கசந்து போகச்செய்யாதபடி போதிக்கப் படவேண்டும். எல்லா மாணவர்களின் ஒற்றுமைக்காக பொதுவாக ஒருபாடம் ஏற்படுத்தலாம். கற்றவனை உண்மைஉழைப்பாளியாய், வகையான வாழ்க்கை நடத்த ஏதுவானவனாய், நாட்டின் நல்ல பிரஜையாய் செய்யும் கல்வி வேண்டும். அக்கல்வி அரசியலையும், சமூகத்தையும், வாழ்க்கையையும் போதிக்க வேண்டும். எந்த நாட்டு நடப்பும், அரசியல் செய்தியும் அவனுக்கு ஒழித்து வைக்கக்கூடாது. இக்கல்வி இந்த அளவோடு நின்றுவிடக்கூடாது. மாறும் உலகோடு ஒட்டியதாய், புதிதாய் வெளியாகும்கருத்துக்களை ஏற்பதாய், வளர்ந்தும் நிமிர்ந்தும் கொடுக்கக்கூடியதாய் இருக்க வேண்டும். இக்கல்வி பெண்களை சமமாய் அவரவர் தராதரத்தின் படி பாவித்து நடத்துவதாய் இருக்கவேண்டும். மூளையைச் செலவழிக்கச் செய்யும் கல்வி கூடாது; மூளையைத் தீட்டும் கல்வி வேண்டும். ஏழைகள் நிறைந்த நம்நாட்டிலே எல்லோரும் சமமாக சிரமமின்றிப்படிக்க கட்டாய, இலவசக் கல்வி வேண்டும். கற்பவரின் மனதை விவரிக்கும் கல்வி; எல்லோரையும் சம

மாகப் பாவிக்கச்செய்யும் கல்வி; ஒழுக்கமும், அன்பும் உருவாகும் படி செய்யும் கல்வி; கற்றபின் வேலைக்குத் திண்டாடச்செய்யாத கல்வி வேண்டும்! வேண்டும்! நம் நாட்டுக்கு அவசியம் வேண்டும்! சுருக்கமாய்ச் சொன்னால் மனிதனை மனிதனாக நடக்க, நடத்த, வாழத்தக்க கல்விவேண்டும். வருமா அக்கல்விமுறை? மாறுமா இன்றுள்ள மட்டரகக் கல்வி? எதிர்பார்ப்போம்.

பி. கமலம், புதூர்.

* * * *

ஒரு நாடு முன்னேற்றமடைய அந்நாட்டில் அறிவுப் பஞ்சம் அகற்றப்படவேண்டும். அறிவை அடைய அடிப்படையானது கல்வி. எப்படிப்பட்ட கல்வி வேண்டும்? கல்வியானது இலக்கியக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, தொழிற்கல்வி—இதுபோல பல வகைப்படும். அறிஞர்கள், கவிஞர்கள், விஞ்ஞானிகள், வீரர்கள் இவர்களின்வரலாறுகளையும் காவியங்களையும், கதைகளையும், கட்டுரைகளையும் நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்றபடி சிறந்த முறையில் எழுதி பள்ளிப்பாடப் புத்தகங்களில் அமைக்கவேண்டும் வருங்கால மாணவர்கள் இது போன்ற பாடங்களைப் படித்து அறிஞர்களாகவும், கவிஞர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், வீரர்களாகவும் தோன்றி அறிவுப் பஞ்சத்தை அகற்றி, தங்கள் நாட்டை எல்லாத்துறைகளிலும் தலைசிறந்த நாடு என்று அகிலத்துள்ள தலைவர்கள் அத்தனைபேரும் போற்றும்படியான ஓர் உன்னத நிலையில் நிற்கச்செய்ய முடியும்.

பள்ளியில் படிக்கும்போது மாணவர்களுக்கு தறிநெசவு, பாய் முடைதல், தையல் மிஷன் தைத்தல், நூல் நூற்றல், சிறந்த படங்கள் வரைதல், தச்சுவேலை இதுபோல் பலகுடிசைத்தொழில்களையும், பெரிய இயந்திரங்கள் எவ்வாறு வேலை செய்கிறது, நிலத்தை எவ்வாறு உழுது பண்படுத்தல் என்பதையும் கற்றுக் கொடுக்கவேண்டும். மாணவர்கள் பள்ளி வாழ்க்கையை முடித்து வெளிவரும்போது சிறந்த நெசவாளிகளாகவும், சிறந்த விவசாயிகளாகவுமிருப்பார்கள்.

ஆகவே அறிவுத்திறனையடைய இலக்கியக்கல்வியும், விஞ்ஞானக் கல்வியும், உழைத்து உண்டு வாழ்க்கை நடத்த தொழிற்கல்வியும் ஒருவனுக்கு அவசியம். வாழ்க்கையில் முன்னேற்றமடைய மேலே கூறப்பட்ட கல்வி எப்படிப்பட்டது என்பதை அறிந்து அதைக் கற்க வேண்டும்.

பா.மொழிப்பிரியன், மானமதுரை.

[★ இவ் அடையாளமிட்ட "எம். பி. குருசாமி, 5ம்படிவம், 4ம் பிரிவு, ஸி. எம். எஸ். உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்" என்பவருக்கு ரூ. 1 பரிசாக அனுப்பப்பட்டுள்ளது.]

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்

சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:
A. ராமகிருஷ்ணன் 7/321, தெப்பம் மேல்பஜார்.

லைன், கலர், ஆப்டோன்

பிளாக்குகள்

சினிமா சிலேடுகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
செய்யுமிடம்

ராஜன் & கோ., சிவகாசி.

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினுவிடை
என்ற புஸ்தகம்
எங்களிடம் கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங்
ரு. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரு. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

1, 3, 5, 7, 14, 20 பவுண்டு டின்களில்
சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.
சிக்கரி கலந்த காபி பவுடரும் கிடைக்கும்.

எட்வர்ட் காபி ஒர்க்ஸ், விருதுநகர்.

பீடி சக்ரவர்த்தி த.பீ.சொக்கலால்ராம்சேட் பீடி

RAMSAIT BEEDI
த.பீ.சொக்கலால்
ராம்சேட் பீடி
முக்கூடல்

காரம், குணம், மணம் நிறைந்தது.
எங்கும் எப்பொழுதும் கிடைப்பது.

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பீ. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,

முக்கூடல் P. O. (திருநெல்வேலி ஜில்லா.)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் கா. சதானந்தம்,

சதானந்தா அச்சகம், விருதுநகர்